சிரித்திரன்

தலைக்கு மேலால் மானம்

என்ன கிணற்றை மூடிப் பந்தல் போட்டிருக்கு... கிணற்றில் இலை, குழை விழாமல் இருப்பதற்கா?

இல்லை... பெண்புரசு மரியாதையாகக் குளிப்பதற்கு... இப்ப யாழ்ப்பாணத்தில் ஹெலிகாப்டர்கள் நிறையப் பறந்து திரியுது.

சிரித்திரன்
வாசக நேயர்
அனைவருக்கும்
எமது
இதயம் கனிந்த
தீபாவளி
வாழ்த்துக்கள்.

*

நவம்பர் 1977

விலை சதம்
75

அடுத்த இதழில்
"கணிப்பு"
கோப்பாய் சிவம்
எழுதும்
சிறுகதை
வெளியாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாடிக்கையாளர்களுக்கும்,
ஆதரவாளர்களுக்கும் எமது
மங்களகரமான தீபாவளி வாழ்த்துகளைக்
கூறிக்கொள்கின்றோம்.

உங்கள் தங்க, வைர நகைகளுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்;

லலிதா ஜூவலறி

உரிமையாளர்:

செல்லையா இந்திரசித்து

இல: 133, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். போன்: 7205

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்திரன்
செய்தொழில் தெய்வம்
சிரிப்பே சீவியம்
நகை: 15
சுவை: 1

புன்னகையால் புரட்சி செய்த புனித மனிதன்.......!

மயில்வாகனத்தார்

நாவலர் சந்தியிலுள்ள செல்லையா கடைக்குள் தேனீர் குடிக்கப் புகுந்த எம்மை அந்த ஜீவன் குழப்ப விரும்பவில்லை. கடைக்குள் ஒன்றரை மணித்தியாலம் நாம் அரட்டை அடித்துவிட்டு வெளிவருமளவும் காத்திருந்தது அந்த ஜீவன்.

''என் நீங்களும் எங்களுடன் கடைககுள் வந்திருக்கலாமே." என்றேன். ''உங்கள் சிவபூசையை இந்தக் ''கொம்யூனிஸ்ட் கரடி குழப்ப விரும்பவில்லை." என்று தனக்குரிய நகைச்சுவைப் பாணியில் பதில் உரைத்தார். ''ஏன் எதற்காக எம்மைக் காத்திருந்தீர்களெனக் கேட்டேன். ''என்னுடைய கையில் கொஞ்சப்பணமிருக்கு... மகள் வீடுகட்ட காசு அனுப்பியிருக்கிறு... அதில் சிரித்திரனுக்கு சந்தாப்பணம் தரவே காத்திருந்தேன்." என் தலை சுற்றியது... சிறு மயக்கத்தின்பின் கண்களை நன்ருகத் துடைத்துவிட்டு, எனதுமுன் நிற்பது தெய்வமா? அல்லது மனிதனு? என்று அந்த மெல்லிய நீண்ட உருவத்தைப் பார்த்தேன். அந்த உருவம் வேறு யாருடையதுமல்ல. உத்தம குணத்தின் உதாரண புருஷன்; பாட்டாளிகளின் பங்காளன்; கொம்யூனிஸவாதிகளின் இனிய தோழன் கார்த்திகேயனேதான். ''ஏன் சேர்... எதற்கு சந்தாப்பணம்... நான் சிரித்திரனை உங்களுக்கு சும்மா அனுப்பி வைப்பேனே'' என்றேன். அதற்கு அவர், ''உடலைக் கரைக்கும் உப்பை நான் அடுத்த வீட்டில் ஒசிப்பில் வாங்குவேன். ஆனல் உடலைப் பருக்கவைக்கும் சிரிப்பை நான் அப்படிப் பெற விரும்பவில்லை'' என்ருர்.

''பீப்பிள்ஸ் வோய்ஸ்'' என்ற ஆங்கில வாரஏடு வெளிவந்துகொண்டிருந்த காலமது. அந்தப் பத்திரிகையிலுள்ள விஷயதானங்களைப் பற்றி ஆலோசிப்பதற்கு நாம் எல்வோரும் மருதானையிலுள்ள 'கிங்ஸ்கோர்ட்' என்னும் கட்டடத்தில் கூடுவதுண்டு.

பத்திரிகை ஆசிரியரான வைகுந்தவாசன், எல்லோரையும் பார்த்து, இலங்கையில் இருந்து வெளியாகும் Daily News, Times, Observer ஆகிய இந்த மூன்று பத்திரிகைகளையும் விமர்சிப்பதற்கு ஒரு நல்ல தலைப்புச் சொல்லுங்கள் பார்க்கலாம்" எனக் கேட்டார். கார்த்திகேயன் அவர்கள் சற்றும் யோசியாது ''Daily News by Timely Observer'' எனக் கூறினுர். எல்லோரும் திருதிருவென விழித்து வியந்தனர். அறிவும், சிந்தனைச் செறிவுமுள்ள ஒருவரைப் பத்திரிகைகள் பயன்படுத்தாதது ஈழத்து எழுத்துலகம் செய்த துர்அதிர்ஷ்டமே.

ஒருநாள் அந்தச் சிரித்த முகத்தில் சினம் தென்பட்டது. ''என்ன சேர் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்" என்றேன். அதற்கு அவர், ''இன்றைய பெற்ருேர் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுக்க வேண்டுமென்பதுதான் நோக்கம். ஆனுல் பிள்ளைகளுக்கோ ஆங்கிலம் 'நோ கம்' என்ருர் அவர். அவர் இன்றைய மாணவர்களின் ஆங்கில அறிவின் நிலைகண்டு மனம் நொந்தவர்.

ஒருநாள் அவர். ''நான் மார்க்ஸிஸம் கற்க முந்னமே மார்க்ஸிஸ்ட்'' என்ருர். நான் ஒன்றும்புரியாது விழி பிதுங்கி நின்றேன். அவர் சிரித்துவிட்டு, நான் மாணவனுக இருக்கும்போது, எனது பாடங்களுக்கு நிறைய 'மார்க்ஸ்' எடுப்பேன். அந்த வகையில் 'மார்க்ஸிஸ்ட்' என்ருர்.

எனது ஊரவரும், உற்ற நண்பருமாகிய ஜெயசிங்கமவர்கள் வடமராட்சித் தொகுதியில் தேர்தலுக்கு நின்றபோது, கார்த்திகேசனவர்கள் பேசியது இன்றும் என் காதில் ஒலித்தவண்ணம் இருக்கின்றது. ''நாங்கள் சுரண்டும் வர்க்கத்தை ஒழிக்கும் கட்சியினர். மதுரத் தமிழாலும், மதுவாலும் மயக்கி உங்கள் வாக்குகளைச் சுரண்ட வரவில்லை. எமது கட்சியின் கொள்கை கட்சிதமாக இருந்தால் உங்கள் வாக்குக்களை திருவாளர் ஜெயசிங்கத்திற்கு அளித்து செல்வாக்காக இருங்கள்" என்ருர். கைதட்டல் ஓய சில நிமிடங்கள் எடுத்தன.

டயோனிஸிஸ் எனும் கிரேக்க தத்துவஞானி கையில் விளக்குக் கொண்டு உலகில் நல்லொருவனைத் தேடி அலைந்தாராம்.

அவரால் ஒரு நல்லவனைச் சந்திக்க முடியாமல்போய் விட்டதாம். இன்று அவர் இருந்து தேடியிருந்தால் கார்த்திகேயனைச் சந்தித்திருப்பார். இந்த உலகில் வாழ்ந்த அந்த ஒரு நல்ல ஜீவனும் அண்மையில் எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவண்ணம்

ஒக்டோபர் சிரித்திரன் படித்தேன். முன் அட்டைப்பட ஜோக் முதல் இறுதியாக முறுவலித்த செய்தி முறுவல் வரை வெகு பிரமாதம்.

சிரித்திரனில்; நல்லது என்று எதைச் சொல்வது, சிறந்தது என்று எதைச் சொல்வது, very fine என்று எதைச் சொல்வது என்று தெரியாமல் தவிக்கின்றேன்.

சிரித்திரன் சாதாரண சிரிப்புப் பத்திரிகையாக இராமல் சுதம்ப மாலையாக மாறி வருவதையிட்டு அகம் மிக மகிழ்கின்றேன்.

''வல்லரசு செல்கிறது'' என்ற வல்லரசு ரசத்தை வரைந்தவருக்கு என்ன பரிசு அளித்தாலும் தகும். அவரது பெயர் இடம்பெறாதது பெருங்குறை.

அல்வாய் வடக்கு,
அல்வாய்.
எஸ். றன்ஞன்

எனது சிறுகதையான 'வாய்க்காலும் வரம்புகளும்' தங்கள் பத்திரிகையில் (ஆனி 1977) வெளிவந்திருந்தது அந்தக் கதை, கொழும்பிலுள்ள தமிழ்க் கதைஞர் வட்டத்தின் மதிப்பீட்டினைப் பெற்று, காலாண்டில் (சித்திரை, வைகாசி' ஆனி) வெளியான சிறுகதைகளுள் சிறந்ததெனப் பரிசு பெற்றுள்ளது.

அதனையிட்டு நான் பெருமையும், பேருவகையும் அடைகின்ற நேரத்தில் சிரித்திரனுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்துக் கல்லூரி,
திருகோணமலை.
மயில். மகாலிங்கம்

சிரித்திரன் தொடர்ந்து படித்து வருகின்றேன். சிறுகதை தொடக்கம் துணுக்கு வரை தேனாக இனிக்கின்றது.

பனைக்குளம்,
இராமநாதபுரம் ஜில்லா,
தமிழ்நாடு.
சர்தார்

மகுடி பதில்களை என்னுடன் வேலை பார்க்கும் ஆங்கிலேய நண்பர் ஒருவருக்கு மொழி பெயர்த்துச் சொன்னேன். Great great என்று பாராட்டினார்.

LONDON. S.W. -11.
ஜீவகன்

சிரித்திரன் படித்தேன். மெயில்வாகனத்தார், மகுடி பதில்கள் மெச்சத்தக்கவை.

LONDON. S. W. 8.
பாலசிங்கம்

நீச்சல் போட்டி

உலகில் எந்தக் கடலிலும், நான் எந்த வீரனுடனும் நீந்தத் தயார்.

நீ... எங்கே நீந்தப் பழகினனி.

யாழ்ப்பாண பஸ் நிலையத்தில்.

யோவ்... சைக்கிளுக்கு லைட் எங்கே?

மின்சாரம் அடிக்கடி தடைபட்டு ஊரே இருட்டாயிடுது. அதைக் கேட்க யாருமில்லை... நம்ம சைக்கிளுக்கு லைட் இல்லாததுதான் டிறையாப் போச்சு.



சுயம்வர காண்டம்

சுயம்வரம் வைத்து ஒரு வீரனுக்குத்தான் பெண்ணைக் கட்டிக்குடுக்கிறது.

ஏன்?

இங்கே சில புருஷன்மார் கலவரத்தின்போது மனைவிமாரை விட்டிட்டு ஓடிவந்திட்டினம்.

ஏன்டா...! இந்தப் பொலீஸ் நம்ம ஹிப்பித் தலையை மொட்டையடிக்கப் பண்ணிருங்க.

பொறுமை... பொலீஸ் மயிர் வளர்க்கேலாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாவளி

குடிகாரன்: தீபாவளிக்கு ஒரு புதுமையான படம் பார்த்தேன்.
ஒருவர்: என்ன படமது?

குடிகாரன்; படத்தில் நடிகன், நடிகை, நாய், பூனை, மாடு, மரம் எல்லாம் டபிள் அக்டிங்.

என்ன கணவன் - மனைவி தீபாவளியன்று கீரியும், பாம்பும் மாதிரிச் சண்டை பிடிக்கிறீங்க!

இவர் தீபாவளி கொண்டாட விரும்புகிறாரில்லையே!
கீரியும், பாம்பும் வேட்டி இல்லாமல்போன காலம் தொடக்கம் கொண்டாடுவதில்லை.

மாரி... கிணறு நிறையத் தண்ணி... தீபாவளிக்கு நல்லாக் கொண்டாடலாமே!

தண்ணி மலிவு. சாராயத் தண்ணி மலிவில்லையே!

தமிழ் கலாச்சாரம் பற்றி நீங்கள் மேடையில் பேசிய பேச்சு நல்லாயிருந்தது... கையில் என்ன பார்சல்?

மகள் தீபாவளிக்குப் போடுவதற்கு 'பெல்பொட்டம்' தைக்கக் குடுத்திருந்தவள்... எடுத்து வர்றன்.

நல்லெண்ணெய் வியாபாரியின் கவலை:

''கிணறு குளமெல்லாம் தண்ணி நிரம்பி வழியுது... பால் வியாபாரி குடுத்துவைத்தவன்.''



''அடிக்கிற கைதான் அணைக்கும்; அணைக்கிற கைதான் அடிக்கும்.''

என்ன சினிமாப் பாட்டுப் பாடுறீங்க.

இல்லை... எங்களுக்குச் சாப்பாடு போட்ட கைதான் தீபாவளிக்கு...

தீபாவளி கொண்டாடவில்லையா...? கிணறு குளமெல்லாம் நிறைந்திருக்கு...

உச்சிக்கு வைக்கிற எண்ணை விலையை நினைக்க உச்சி பிளக்குதே!

என்ன வெறியில் ரோட்டில் கிடக்கிறீர்... தீபாவளிக் கொண்டாட்டமோ!

இல்லை... தேர்தல் காலம் போட்டவெறி இன்னும் போன பாடில்லை.



குடிகாரன்: ஐயா... இந்தத் தீபாவளிக்கு முந்தி போன தீபாவளிக்கு வெட்டுப்பட்ட வழக்கை முடித்திடுங்க... இல்லாவிட்டால் இரண்டு வழக்குப் பேசவேண்டி வரும்.

சைவம்: தீபாவளிக்கு ஆடு, கோழியெல்லாம் வெட்டுவாங்க என்ன...

மற்றவர்: ஆடு, கோழி என்ன மனிதனையும் வெட்டுவாங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியச் சாரல்

□ கதையில் வரும் கம்பனின் கும்பகர்ணனும், வியாசனின் கண்ணனும், ஷேக்ஸ்பியரின் ஷைலக்கும், தாஸ்தாவெஸ்கியின் ராஸ்கோலினிகாவும், டால்ஸ்டாயின் அன்னவும், டென்னஸி வில்லியம்ஸின் ஆல்மாவும் தனித்த உருவங்களாயின் அவர்களின் பிரச்சினைகள் தீர்ந்தே போயிருக்கும்; அந்தக் கதைகளோடு. ஆனல் அவ்விதம் தீராதுபோன காரணம்தான் என்ன? அவர்கள் ஓர் உருவம் தாங்கிய போதிலும், பொதுவான மனித குலத்தின் நிலையான உணர்ச்சிகளின் பிரதிநிதிகள் என்பதாலேயே பிரச்சினைகளின் முடிவாகக் கதையில் நிறைந்தும், பிரச்சினைகளின் ஆரம்பமாக வாழ்க்கையில் முளைத்தவண்ணமிருக்கிறார்கள். முடிவா? யாருக்கு வேண்டும்?

- ஜெயகாந்தன்

□ எந்தவித ஆரவாரமுமின்றித் தமது எழுத்துலக வெள்ளிவிழாவை மிகமிக அமைதியாக தமது சிறுகதைத் தொகுதியொன்றினை வெளியிடுவதன்மூலம் நிறைவுடன் கொண்டாடும் பண்பு நிறைந்த எழுத்தாளர் அ. ஸ. அப்துஸ்ஸமது அவர்களைத் தொடர்ந்து நீண்டகாலம் ஆரோக்கியமான எழுத்துப் பணிபுரிய வேண்டும் என வாழ்த்துகிறது ஈழத்து இலக்கிய உலகம்.

□ இவ்வாண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஸ்பானிய கவிஞர் வின்சன்ற் அலெக்சாண்டருக்குக் கிடைத்துள்ளது.

□ சமீபத்தில் திரு நா. முத்தையா அவர்கள் எழுதிய 'ஏழாலை' என்ற நூல் வெளிவந்துள்ளது.

□ இலங்கை - இந்திய பண்பாட்டுக் கழகம் என்ற புதிய அமைப்பு சமீபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. அறிஞர்-கலைஞர் பரிமாற்றம் இதன் முக்கிய நோக்கமாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இலங்கை-இந்தியத் தொடர்பில் இதுவரை கலை, இலக்கியம் சம்பந்தமாக ஒருவழிப் பாதையாக நடைபெற்று வந்த சில கசப்பான அனுபவங்களை மாற்றியமைக்க, இரா. சிவலிங்கத்தை செயலாளராகக் கொண்ட இக்கழகம் முன் வரும் என எதிர்பார்ப்போம்.

என்னுடைய மகன் எண்ணெய் உள்ள ஊரிலை தீபாவளிக்கு முழுக எண்ணெயில்லாமல் கஷ்டப் படப்போருன்.

என்ன பேசிருய். ஒண்டும் புரியவில்லை.

அவன் பெற்ருேலெண்ணையுள்ள ஓமான் தீவிலை வேலை. முழுக நல்லெண்ணெய் அங்கே எங்கே கிடைக்கப்போகுது?

உங்களுக்குத் தேவையான சகலவித
மோட்டார் உதிரிப்பாகங்களினதும்
உத்தரவாதமிக்க
விற்பனையாளர்கள்

துரை

ஆர். ஜீ. பில்டிங்
66, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

★ போக்குவரத்துச் சேவையின் முன்னேடிகள்
★ உண்மையான பாதுகாப்பு
★ உத்தரவாதமிக்க கவனம்
★ உறுதியான நம்பிக்கை

உங்கள் பொருட்களை எவ்விடத்திற்காயினும் நம்பிக்கையுடன் அனுப்ப நாடுங்கள்.

ராஜகுமாரி
ட்ரான்ஸ்போட் சேவிஸ்
83/2, ப்ருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
யாழ்ப்பாணம்.
போன்: 7565.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்தி முறுவல்

● லாஸ்ஏஞ்சல்ஸ் நகரில் கடைகளில் நடக்கும் திருட்டுக்களைத் தடுக்க மூன்று ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த மூவரும் மாஜிக் கொள்ளைக்காரர்கள்.

பாம்பின் காலைப் பாம்பறியும் என்கிறார் எங்கள் மகுடியார்.

● உடல் பருத்துவிட்டால் போர் வீரர்களைப் படையிலிருந்து டிஸ்மிஸ் செய்துவிடப் போவதாக உகண்டா ஜனாதிபதி இடிஅமின் கூறியுள்ளார்.

என்னுடைய நண்பன் இடி இடியென்று சிரித்துவிட்டு ''இடிஅமின் ஒரு யானைப்பாரம் இருக்குமே'' என்கிறார்.

● ரஷ்யாவில் உணவுப்பொருட்களில் கலப்படம் செய்வோருக்கு மரணதண்டனை விதிக்கப்படுகிறது

''உணவுகளில் கலப்படம் செய்தவரை அதை உண்ணவைப்பதே சிறந்த மரணதண்டனை" எனக் கூறுகிறது கலப்படத்தால் இறந்த ஒருவரின் ஆவி'

● ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிபீடத்தில் இருந்த காலத்தில் பாணிற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, சில மலையகத் தொழிலாளர்கள் புல் தின்று உயிர் வாழ்ந்தனா.

''பசுமை நினைவுகள்' என்று ஒரு புத்தகமெழுதப் போவதாகக் கூறுகிறார். யு. என். பி. கட்சியைச் சேர்ந்த ஒருவர்.

● கடந்த 30 ஆண்டுகளாகத்தான் அமெரிக்கர் மோர் சாப்பிடும் பழக்கம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ''விட்டமின் பிகாம்பிளெக்ஸ் அதில் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு அவர்களுக்கு மோர்மீது பற்று ஏற்பட்டிருக்கின்றது.

'' 'MORE' FOR MORE HEALTH" என்று தனது ஹோட்டலில் எழுதித் தொங்கவிடப்போவதாக கூறுகிறார் ஹோட்டல் முதலாளி ஒருவர்.

● அமெரிக்கப் பெண்கள் அமெரிக்காவில் தயாராகும் சிகரட்டைவிட, இந்தியாவில் தயாராகும் பீடிகளையே விரும்பிப் புகைக்கிறார்கள்.

''அமெரிக்கப் பெண்களுக்கு யாழ்ப்பாணத்துக் கோடாப்போட்ட சுருட்டின் சுவை தெரியாதுபோலும்" என்கிறார் சுருட்டுக்கடை முதலாளி ஒருவர்.

எமது அஞ்சலி

சிரித்த முகத்துடனும் நிறைந்தமனத்துடனும்
'சிரித்திரனின்' வளர்ச்சிப்பாதைக்கு
வழிகாட்டியாக உழைத்த உனது
விழிமலர்கள் குவிந்துவிட்டன.
உற்சாகமும் உழைப்புமிக்க உன்
உடலின் உயிர்த் துடிப்பினை

கல்நெஞ்சு கொண்டோரின்
வெறித்தனம் பறித்துக்கொண்டுவிட்டது.
மனிதத்தனம் மடிந்துகொண்டிருக்கும் மண்ணில்
மனிதாபிமானத்துடன் வாழ்ந்துகாட்டிய நீ
மறைந்துவிட்டாய்
தம்பி ராஜேந்திரா,
சிரித்து சிரித்து சிந்திக்கவைத்த சிரித்திரன்
உன் பிரிவின் சோகத்தை
அழுதழுது சிந்திக்க வைத்துவிட்டாயே!
உன் ஆத்மா சாந்தியடைய எம் அஞ்சலிகள்.

- ஆசிரியர்

சுவை மிகுந்த சொர்க்கம்

சுவை சொட்டும்

■ சிற்றுண்டி
■ கோப்பி
■ குளிர்பானம்

எல்லாவற்றிற்கும் சிறந்த இடம்

Tower Coffee & Cool Bar

Opposite Wellington Theatre, Jaffna.

இங்கு சிரித்திரனும் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகுடி பதில்கள்

க. சிவநாதன், மூதூர்.
கே: தமிழன் என்ன செய்து கொண்டிருக்கின்றான்.

ப: பேசுகிறான். விடிய விடியப் ஆலயத்திலும்பேசுகின்றான். காரியாலயத்திலும் பேசுகின்றான். சந்தியிலும் பேசுகின்றான்; பந்தியிலும் பேசுகின்றான். திரையிலும் பேசுகின்றான்; நித்திரையிலும் பேசுகின்றான். அவனது 'நாடி' ஆடா விநாடியே இல்லை.

ம. முருகன், அச்சுவேலி.
கே. இராவணன் மோட்சத்தில் என்ன செய்துகொண்டிருக்கிறார்.

ப: பத்துத் தலைகளாலும் தமிழனை எண்ணி, இருபது கண்களாலும் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றார்.

சி. ஐங்கரன், நல்லூர்.
கே: இன்று மதங்களின் நிலை என்ன?

ப: அன்புதான் மதங்களின் அடிநாதம். இன்று அடிதான் நாதம்.

க. சிவசெல்வம், மன்னார்.
கே: பெரும்பான்மை இனம் இதயமில்லாமலும், சிறுபான்மை இனம் ஒற்றுமை இல்லாமலும் இருந்தால்...

ப: பான்மை கெட்ட வாழ்வு.

க. தங்கவடிவேல், திருகோணமலை
கே; எமது அரசாங்கம் எதை விரும்பும்? எதை விரும்பாது?

ப: பிற நாட்டின் முதலீட்டை விரும்பும். தலையீட்டை விரும்பாது.

செல்வி. ஞானமணி
சுப்பிரமணியம், புத்தூர்.
கே: அரசியல்வாதிகளின் முதற் கடமை என்ன?

ப: வாய்காக்க வேண்டும். இல்லையேல் மக்கள் உடல் காப்பது கடினம்.

க. சிவலிங்கம், மட்டுநகர்.
கே: தர்மம் தலைகாக்கும் என்பது அந்தக்காலம்... இந்தக் காலம்?

ப: பத்திரிகா தர்மம் தலை காக்கும்.

த. மரியாம்பிள்ளை, தும்பளை.
கே: மனிதனைப் பற்றி உமது கருத்து?

ப: மனிதன் இரட்டை நாக்குள்ள இரண்டு கால் பிராணி. அவனுடைய நாவாலும், பேனாவாலும் உலகக் கோளாறு ஊற்றெடுக்கின்றது.

செல்வி. மீனும்பிகை தம்பையா சாவகச்சேரி.
கே: மனிதனின் உடை எப்படிப் பட்டதாக இருக்கவேண்டும்?

ப: உடை மனிதனின் ஒரு அங்கம். அதைக் கோமாளித்தனமாக்கக் கூடாது.

த. மனோகரன், மானிப்பாய்.
கே: காதல் எப்படிப்பட்டதாக இருக்கக்கூடாது?

ப: மீனைக் கரையில் இருந்து இழுத்தால் இறந்து விடுகின்றது. ஆனால் கடல் வரண்டுவிடுவதில்லை அப்படிக் காதல் ஒரு ஒரு தலைப் பட்சக் காதலாக இருக்கக்கூடாது

க. ஞானமுத்து, கிளிநொச்சி.
கே: விவசாயியை மணப்பது அவமானம் என்று நினைக்கும் பெண்களைப்பற்றி உமது கருத்து?

ப: அப்படியாயின் அவள் உண்பதும் அவமானம். உணவு யாரிடமிருந்தாம் வருகிறது.

சி. சிவஜோதி, சங்கானை.
கே: யாழ்ப்பாண மக்களைப்பற்றி உமது கருத்து?

ப: பொறுமை இல்லாதவர்கள். கடுகதியில் அகதிகளாய் வருவார்கள்; கடுகதியில் திரும்பிப் போவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. தம்பிராசா, யாழ்ப்பாணம்.

கே: தாரமும், குருவும் தலைவிதி உண்மையா?

ப: உண்மை... சிறுபான்மை இனத்திற்குப் பெரும்பான்மை இனமும் தலைவிதி.

ப. பரமேஸ்வரன், மீசாலை.

கே: வீட்டில் டெலிபோன் இருப்பது நல்லதா?

ப: அந்த வீட்டில் இளம் பெண் இருந்தால் தனக்குத்தானே கல்யாணம் பேசிக்கொள்ளலாமல்லவா...

ப. பரமேஸ்வரன், கரவெட்டி.

கே: விவசாயத்தின் எதிர்காலம் என்ன?

ப: கீரைகூடப் பிற நாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் காலம் வரும். காடுகள் தோட்டமாகின்றன; தோட்டங்கள் வீடுகளாகின்றன.

க. கருணாகரன், கோப்பாய்.

கே: தமிழ்மக்கள் உலகில் அநாதைகளாக அலைவதன் காரணமென்ன?

ப: தமிழ் அரசியல்வாதிகள் ஏராளம் தோன்றிவிட்டார்கள். இன்னும் தமிழ் அரசியல் ஞானிகள் தோன்றவில்லை.

செல்வி. ரஞ்சனி கந்தையா. புலோலி.

கே: உன் காதிற்குக் கனிவானது எது? கசப்பானது எது?

ப: புல்லாங்குழலிசை ரசமானது புல்லுருவிகளின் குரலோசை நாரசமானது.

க. சின்னத்தம்பி, கிளிநொச்சி.

கே: நடிப்புலகம் எப்படி இருக்கிறது?

ப; கூத்தைச் சினிமா விழுங்கியது; சினிமாவை டெலிவிஷன் விழுங்கிக் கொண்டிருக்கிறது

சி. ராஜநாதன், மட்டுநகர்.

கே: மகுடியாரே! நீர் அன்ன நடையைக் கற்பனை பண்ணுவது உண்டா?

ப: ஏனில்லை பெல்பொட்டம் அணிந்த ஆடவர், அரவையர் வீதி வெள்ளத்தில் 'பெல்பொட்டம்' நனையாது அடியெடுத்து வைத்து அசைந்து போகும்போது அன்னத்தைக் கற்பனை பண்ணுதுண்டு

ஏ. ராஜா, வவுனியா.

கே; மகுடியாரே! யாழ்ப்பாணத்தில் கலை நிகழ்ச்சிகள் உண்டா... பொழுதுபோவதற்கு?

ப: தேர்தல் சங்கீதம் போய், இப்போ தவளைகளின் சங்கீதம்... பின்பு நுளம்புகளின் சங்கீதம்... நிகழ்ச்சிகள் தொடரும்.

செ. கதிர்காமநாதன், கிளிநொச்சி.

கே: உயிரா பொருளா மேலானது?

ப: பொருள். பொருள் மேலானது எனும் காரணத்தாலல்லவா கட்டடத்தை அழிக்காது உயிரை அழிக்கும் 'நியூட்ரன்' குண்டை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ர. மாணிக்கவாசகர், சட்டுவன்.

கே: உலகம் இன்று எங்கு போய் கொண்டிருக்கிறது?

ப: மானம், விமானம், இசை எல்லாம் திசை திருப்பிப்போய்க் கொண்டிருக்கிறது.

செல்வி. மணிமேகலை, சங்கானை.

கே: தமிழ் மக்கள் சோகத்தில் நன்றாக நனைந்து சிரிப்பை மறந்து போனார்கள் போலும்.

ப: Correct! அவர்கள் படிக்கும் சிறுகதையில் சோகம்... திரைக் கதையில் சோகம்... கேட்கும் ரேடியோக் கதைகளில் சோகம்... அவர்களின் கதையே சோகக்கதை தான்.

க. சிவஞானசுந்தரம், வேலணை.

கே: மகுடியாரே! இராமனா, இராவணனா வீரன்?

ப: இராமனா, இராவணனா வீரன் என்ற ஆராய்ச்சியை நிறுத்தி, முதல் நீர் வீரனா? கோழையா? என்பதை ஆராயும்.

யே. மலர்விழி, கல்வியங்காடு.

கே: ஏன் 'வீடுவரை மனைவி' என்று பாடப்பட்டது?

ப: சுடுகாட்டிற்கு வந்து உயிரை வாங்காதிருப்பதற்கு.

க. நாகநாதன், கச்சாய்.

கே: மனிதனின் வாழ்வு ஒரு சக்கரம்

ப: ஆம்! ஒருகாலம் சென்ற இடமெல்லாம் சிறப்பு... ஒருகாலம் சென்ற இடமெல்லாம் செருப்பு.

செ. கந்தவனம், பளை.

கே: பழம்பெருமை பேசுபவனைப் பற்றி உமது கருத்து?

ப: தன் மூதாதையர் மரத்திலிருந்து சாப்பிட்ட பழங்களின் பெருமை பற்றிப் பேசுவதில் தவறில்லையே.

க. தவராஜசிங்கம், மீசாலை.

கே: மாணவர்களெல்லாம் பாடசாலையிலில்லாது, படமாளிகையில் இருக்கிறார்களே?

ப: கரும்பலகையை விரைவில் வெண்திரையாக்க வேண்டும்.

ஏ. பரமானந்தம், வட்டுக்கோட்டை.

கே: உலகில் இன்று பண்புள்ளவர்கள் இருக்கிறார்களா?

ப: இருக்கிறார்கள். லண்டன் பொலீசார் மிகமிகப் பண்பாளர்கள் என்று லண்டனால் வந்த என் நண்பர்கள் கூறியிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை - பாடல்கள்

ரோமாபுரி எரிந்தபோது
நீரோ பிடில் வாசித்தான்
மதுரை எரிந்தபோது
மாதவி யாழ் வாசிக்கவில்லை
மாருக - அன்றுமுதல் -
யாழ் வாசிப்பதையே
நிறுத்திவிட்டாள்.

- மேத்தா

உருவகச் சிரிப்பு

தீப்பெட்டி: 'எமக்கு மாரிகாலத்தில் பற்றுதல் இல்லை'

தவளை: ''நாங்கள் மப்பிசைக்காரர். மாரி காலத்தில்தான் எங்கள் நிகழ்ச்சிகள் இடம் பெறும்.''

மின்சாரம்: ''மாரி காலம் வந்தால் வேலைநிறுத்தம் செய்யத் தயங்கவே மாட்டோம்.''

யாழ்ப்பாண பஸ்: ''எனது வாழ்க்கை மேடுபள்ளம் நிறைந்தது.''

வெள்ளம்: ''எல்லோரும் என்ஜினியர்படிப்புப் படித்துக் கிழித்தவர்கள். ஆனால் என்னைச் சேகரித்து வைக்கத் தெரியாதவர்கள்.''

அறியாமை

கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் ஒரு நாளிரவு திருக்குறள் புத்தகமொன்றின் புது உரை நூலொன்றைப் படித்துக்கொண்டிருந்தாராம். நள்ளிரவானதால் உறக்கம் வந்து விட்டது. புத்தகத்தை மூடிவிட்டுப் படுத்துறங்கிவிட்டார். மறுநாள் அதிகாலையில் மீண்டும் அதைப் படிக்க எண்ணியபோது முதல் நாளிரவு எங்கே விட்டார் என்பதற்கு அடையாளம் வைக்கவில்லை. புத்தகத்தை எடுத்து விரிக்க ஆரம்பித்தார். அடையாளம் இருந்தது - தூக்கமயக்கத்தில் புத்தகத்தை மூடியபோது, இடையே ஒரு பூச்சி அகப்பட்டு நசிந்து இறந்துபோய் இருந்தது. அதுதான் அடையாளம்.

அவர் படித்துக்கொண்டிருந்த பகுதி எது தெரியுமா?
''கொல்லாமை'' என்ற அதிகாரம்தான்.

வெளி வந்துவிட்டது!

G. C. E. (O/L) வகுப்பிற்கான

கணக்கியல்
மாதிரி வினாவிடை

விபரங்கட்கு:
THE JAFFNA LAW CENTRE
81, Main Street, Jaffna.

VISIT

Durgha Auto Hardwares
No: 11, Stanly Road, Jaffna.

FOR

ELECTRIC MOTORS,
WATER PUMPS,
WATERPUMP SPARES,
ALKATHENE WATER PIPES &
GENERAL ITEMS.

மின்சார மோட்டர்கள்
நீரிறைக்கும் கருவிகள் -
உதிரிப்பாகங்கள்,
அல்கதீன் பைப் வகைகள்

அனைத்திற்கும்

துர்க்கா
ஒட்டோ ஹாட்வெயர்ஸ்
11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சிறுகதை

மாத்தளை வடிவேலன்

அக்கினி

அறைக்கதவை இழுத்துச் சாத்திவிட்டு வெளியே வந்து ரெங்கையாக் கிழவன் பெருமூச்சு விட்டான். இனம்புரியாதசோகம் அவனை வாட்டி எடுத்தது. என்ன செய்வது என்று புரியாது மௌனமாக நின்றான். லயத்திற்கு எதிரே வாமனாவதாரமாக நீண்டு கிடக்கும் மலைகள் அவனது துயரத்தை அங்கீகரிப்பனபோன்று உம்மென்று இருக்கின்றன.

தினமும் பார்த்துப் பார்த்து அலுத்துப் போனவைகள் தான். ஆனால்; இன்று எல்லாமே தன்னைப் பார்த்து அனுதாபப்படுவன போல கிழவனுக்குத் தெரிந்தன.

லயத்துக்காம்பிராவிற்கு முன் நிறைமாதக் கர்ப்பிணியாக விளங்கும் ஈரப்பலா மரம் மெல்லிய காற்றுக்கு சலசலத்துக்கொள்கின்றது. வாசலுக்கு இறங்கிப் பூவும் பிஞ்சுமாக பூரணகும்பமாகத் திகழும் மரத்தை ஏக்கத்துடன் அண்ணாந்து பார்த்தான். தான் பெற்ற பிள்ளையைக் கனிவுடன் நோக்கும் குளுமையில் அவனது உள்ளம் நெகிழ்ந்தது. இது அவன் நட்ட மரம், எத்தனையோ பஞ்சங்களுக்கு அவனுக்கு மட்டுமல்லாது முழுத்தோட்டத்திற்குமே கைகொடுத்து உதவிய மரம். இனி அதை அவன் நிரந்தரமாகப் பிரிந்தாக வேண்டும்.

கிழவனுக்கு அதற்கு மேல் அவ்விடத்தில் நிற்க முடியவில்லை. படி இறங்கி மெதுவா நடந்தான். பின் ஏதோ நினைத்தவனாக நின்று திரும்பிப் பார்த்தான். கதவில் கொலுவிருக்கும் பூட்டைக் கண்கள் தரிசித்தன. சுவரை நோட்டமிட்டான். புகையாலும் தூசியாலும் அழுக்கேறிக் கறுத்துப்போன அந்தச் சுவரில் கதவுக்கு மேலே ஒரு அடிச்சதுரம் வெள்ளைவெளேரென்று வெண்திரையாகப் பளிச்சிட்டது.

''அரி ராமா... ராமா...'' என்று முணுமுணுத்துக்கொண்ட கிழவனின் கண்கள் பனித்தன. நேற்றுவரை அந்த இடத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த ''ஆஞ்சனேய சகித சீதா ராம'' படம் அவனுடைய பிரயாண மூட்டையில் அடைக்கலம் புகுந்துவிட்டது.

ரெங்கையாக் கிழவன் நாளை இந்தியாவுக்குச் செல்கின்றான். புதராய் மண்டிக் கிடக்கும் தேயிலைச் செடிகளுக்கிடையில், நெளிவிட்டுக்கிடக்கும் செம்மண்பாதையில் இறங்கி டவுனை நோக்கி நடந்தவனின் மனதில் பல எண்ணங்கள் ஊற்றெடுத்தன.

தவறணைக்காரர் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் ரெங்கையாக் கிழவன் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக இத்தோட்டத்தில் தொழில் புரிகின்றான். இளம் வயதிலேயே, தன்னுடைய மனைவி 'காமாட்சியை' நெருப்புக் காய்ச்சலுக்குப் பலிகொடுத்த பின்னர் மீதி நாட்களைக் குடும்பப் பற்றில்லாத தன்னந்தனியனாகவே ஓட்டிவிட்டான்.

உழைப்பே நிரந்தர உறவாகிவிட்டது. குன்றுகளிலும், சரிவுகளிலும் 'பம்' மென்று மண்டிக் கிடக்கும் தேயிலைச் செடிகள் யாவும் அவன் கைப்பட தவறணையில் வளர்ந்தவைகள் தான். ஐம்பத்திஐந்து வயதில் ஓய்வு பெற முடிந்தும், தவறணை ரெங்கன் இல்லாத 'நர்சரி' ஒன்றினைக் கற்பனை செய்து பார்க்க முடியாத துரை, மேலும் ஒரு ஐந்து வருட வாய்ப்பினை 'அனுபவசாலி' 'கைராசிக்காரன்' என்ற நற்சாட்சிப்பத்திரங்களுடன் கொடுத்தார்

கிழவனுக்கு நெருங்கிய உறவினன் என்று ஒருவரும் இல்லை. ஆனால் அந்த நாலு டிவிசன் ஆட்களும் கிழவன் மீது உரிமை கொண்டாடினர்.

கிழவன் எல்லோருக்குமே பொதுவானவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயசுப் பெண்களுக்கு 'தவறணை அப்பா' வயதுப் பெண்களுக்கு 'தவறணைத் தாத்தா' தோட்டத்திலுள்ள வளர்ந்தவர்கள் 'பெரியவர்' என மதிப்புக் கொடுப்பார்கள். ஸ்டோருக்குக் கொழுந்து நிறுக்கச் செல்லும் வயசுப் பெண்கள் அந்த அவசரத்திலும், தவறணைக்குள் புகுந்து பூவொளியுடன் போராடிக்கொண்டிருக்கும் கிழவனின் வெற்றிலைப் பையைக் காலி செய்து விட்டே செல்வார்கள். கிழவனும் பகிடி செய்வான். மாலையில் கிழவன் சிறுவர்களுக்குக் கதை சொல்வான். சம்பள நாளன்று சிறுவர்களுக்கு மிட்டாய் கிடைக்கும். ஏழு நாட்களுக்கென்று வழங்கப்பட்ட கூப்பன் அரிசி மூன்று நாட்களில் தீர்ந்துபோக மீதி நான்கு நாட்களுக்கும் எப்படிப் பொழுதை ஓட்டுவது என்று கையைப் பிசைந்துகொண்டு வந்து நிற்கும் குடும்பப்பாரம் மிக்க பெண்களுக்கு "ஏன்டி அம்மா உன் புருஷன் இன்னும் அந்தக் குடிப்பழக்கத்தை விடலியா......? சரிதான் போ... என்று சலித்துக்கொண்டபடியே ஐந்தோ... பத்தோ... கொடுப்பான்.

இப்படித் தோட்டத்தில் கிழவன் எல்லோருக்குமே பொதுவானவன்.

ஆங்கிலேயன்: உனக்குச் சொந்தங்கள் இருக்கா?

தமிழன்: சொந்தங்கள் ஏராளம். சொந்த ஊர்தான் இல்லை.

அரசகேசரி

சகலரினதும் அன்பிற்கும் பொதுவானவன்.

தோட்டத்தில் உத்யோகத்தரிடையேயும் கிழவனுக்கு நல்ல மதிப்பு. பாத்திகளுக்கு மத்தியில் பவ்வியமாகக் கன்றுகளுக்கு நீவி நீவி தண்ணீர் போட்டுக்கொண்டிருந்த கிழவனிடம் சட்டைக் காற்சட்டை போட்டுக்கொண்டு அது என்ன்? இது எப்படி? என்று கேட்டுப் படித்தவர்கள் எல்லாம் இன்று பெரிய துரையாக வேறு தோட்டங்களில் வேலை செய்தாலும், இங்கு வரும்போது "சலாமுங்க தொரைங்களே" என்று தலைப்பாகையை உதறி கம்கட்டில்' இடுக்கிக் கொண்டு முரசு தெரியச் சிரிக்கும் கிழவனை ஆதரவோடு தட்டிக் கொடுப்பதோடு, ஒரு பத்தோ... இருபதோ கொடுப்பவர்களும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டைக் கவுணில் 'சின்னப் பெண்'ணைக் காட்சி தரும் சோபனு தனக்குப் புரியாத மொழியில் ஏதேதோ கூறிச் சிரித்தாலும், அதனையும் கிழவன் ஒரு அடக்கமான சிரிப்பில் அங்கீகரித்துப் பணிவான். அப்படி ஒரு பணிவு.

இப்படிக் கிழவன் எல்லோருக்குமே பொதுவானவன்.

ஆனுல் இந்தத் தொடர்புகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பது போன்று, வானவெளியில் நீந்திக்கொண்டிருந்த பட்டம் கயிறறுந்து தவிப்பது போன்று கிழவனின் இந்தியப் பயணம் அமைந்துவிட்டது.

யார்...யாரெல்லாமோ தடுத்தும் கேளாது, இந்த ஆத்மா அந்த மண்ணில்தான் அடங்கும் என்று தாய்நாட்டிற்கே மனுப் போட்டுவிட்டான். நாலைந்து குடும்பங்கள் குடிபெயர்ந்தவுடன் கிழவன் வேட்கையுடன் தீவிரமாகச் செயலாற்றினுன்.

கிழவனை, இன்று... நாளை... கையொப்பம் பிழைச்சுப் போச்சு என்றெல்லாம் இழுத்தடிக்காது சின்ன கிளாக்கர் சேவைக்காலப் பணம், ஊழியர் சேமலாபநிதி என்பவற்றையெல்லாம் முடித்துக் கொடுத்து விட்டார். நூற்றுக்கு இருபது என்ற அவரின் கமிஷன் கிழவன் விடயத்தில் புறநடையாகப் போய்விட்டது. கிழவன் சந்தோஷம் என்று நீட்டிய இரண்டு பச்சைத்தாள்களைக் கூட வாங்க மறுத்துவிட்டார்.

காதில் சடுக்கன் ஒளிதர தன் புகைப்படம் ஒட்டிய பாஸ் போட்டை' தலைவர் கொடுத்த பொழுது கிழவனுக்கு எப்பொழுதோ நினைவிலிருந்து மறைந்து போன "ஆலமரத்துக் கல்லுக் காட்டில் அமர்ந்த பிள்ளையாரும்" வயல்வெளியும், தென்னை மரங்களும் நிறைந்த ஆத்தூர் கிராமத்திற்குப் பறப்பதுபோன்ற உணர்வு ஏற்பட்டது.

பிரிந்து போக இருக்கும் கிழவனைக் கடந்த இரு வாரங்களாக விருந்துபசாரங்களில் திளைக்கச் செய்துவிட்டார்கள் தோட்டத்தவர்கள். நாள் நெருங்க நெருங்க சோகம் கொடிகட்டிப் பறக்கத் தொடங்கிவிட்டது. அழுகையும், கண்ணீரும்தான் பிரியமானவர்களுக்குக் கிழவன் கொடுத்தது. போக மீதிப் பொருட்கள் கட்டப்பட்டு பயணத்திற்குத் தயாராகி விட்டன.



அப்பன் கழுத்தறுத்தவன். மகன் காதறுத்தவன்

ஷ.... குடும்பம் படிப்படியாக திருந்திக் கொண்டு வருகுது.

நீ களவாகக் காதற் கடிதம் எழுதியதற்குக் கண்டித்தாரே உனது அண்ணு அவர் எங்கே?

அவர் கள்ளக் கையெழுத்து வைத்ததற்காக சிறைவாசம் அனுபவிக்கிறுர்.

— அதிமதுரம்

புதன்கிழமைதான் கப்பற் தலைவர் கறுப்பையாவும் தொண்டர் தலைவர் சிவனுவும் தலைமன்னர்வரை கூட வருகின்ருர்கள். இனிக் காணவா போகின்ருேம் என்ற நினைப்பில் இறுதியாக தோட்டத்தவர் எல்லோருக்கும் இரவில் ஒரு தேனீர் விருந்தளிக்க வேண்டும் என்ற முடிவில் சாப்பாட்டுப் பொருட்களும், பழங்களும் வாங்குவதற்காகக் கிழவன் நகருக்குச் சென்றுகொண்டிருக்கின்ருன்.

வட்டிக்கடை செ.மு.பிள்ளையின் கடையைப் பார்த்தவனுக்கு பத்து வருடங்களுக்கு முன்னர் தேயிலை ஸ்டோர் பற்றி எரிந்த சமயம் நினைவிற்கு வந்தது. அவனது கால்கள் இயங்க மறுத்தன.

யாரோ ஒருவர் ஏய் தாத்தா என்ன வேடிக்கையா பார்த்துக் கிட்டு இருக்க... சுருக்கா வீட்டுக்குப் போன்னு விரட்டியது கேட்டது.

தோளில் கிடந்த சால்வையை உதறி காதை மறைத்து தலைப்பாகையாகக் கொண்டவன் சரி வந்தது வரட்டும் என்று சந்தைக்கு இறங்கினுன்.

பொலிஸ் அதிகாரி: நீர் லஞ்சம் கொடுத்தது உண்மைதானு?

ஒருவர்: மன்னிக்க வேணும். வலது கை கொடுப்பதை இடது கை அறியக்கூடாது எனும் தர்மத்தை நான் கடைப்பிடிப்பவன்

சந்தையில் வாழைப்பழங்களை வாங்கிக் கொண்டிருக்கும் போது பெரும் இரைச்சல் கேட்டு கிழவன் பயந்துபோனுன். கப்பு தடிகள் சகிதம் இன்னும் பயங்கரமான ஆயுதங்களையும் ஏந்தியபடி லொறிகளில் தொற்றிக்கொண்டு ஏதோ கோஷித்தபடி தியேட்டர் சந்தியில் பிரிந்து தோட்டத்திற்குச் செல்லும் பாதையில்விரைந்து கொண்டிருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவாய் இருக்கும் என்று தன்னைத்தானே? வினவி? பல பயங்கரமான பதில்களைக் கற்பனை செய்து அதிர்ந்து போனான். எனினும் "எல்லாம் அந்த முருகன் செயல் என்று சமாதானமானான்

இரண்டு நாட்களுக்கு முன் பக்கத்துத்தோட்டத்தில் நிகழ்ந்த சம்பவம் — நினைக்கும்போதே பகீரென்றது. தலைவாழைக் குருத்தை வெட்டிச் சரித்த மாதிரி வாழ வேண்டிய வயதில்...

என்ன நடந்தாலும் லயத்தில் ஒருவரும் இல்லை. எல்லோரும் தூரத்து மலைகளில் வேலை.

ஆளும் பேருமாக இருந்தாலும் எதைத்தான் பெரிதாகச் சாதித்துவிட முடியும்.

பாக்குவெட்டியில் வைத்த பாக்கின் அவலநிலை. தாங்க வேண்டிய தரையே குழியாக விழும்போது...

நடைபாதையில் கடைவைத்திருந்த சிறுவர்கள் வாழைப்பழத்தோலை வீசி எறிந்து துவேசமான வார்த்தைகளைக் கொட்டினார்கள். கிழவன் ஒன்றையும் பொருட்படுத்தவில்லை,

இறக்கமுடியாத மனச்சுமையுடன், தோட்டத்தவர்களை உபசரிக்க வாங்கிய பொருட்களும் கனக்க, தோட்டத்தை நோக்கிச் விரைவாக நடந்தான்.

நகரைவிட்டு நீங்கித் தார் ரோட்டில் நடந்து தோட்டத்துச் செம்மண் பாதையில் ஏறி லயத்தைச் சமீபிக்கும் முன்னரே நடந்துவிட்ட படுபாதகச்செயலை ஊகிக்க முடிந்தது.

லயம் அக்கினி வெள்ளத்தில் குளித்துக்கொண்டிருந்தது. ஆடு, மாடுகளை அடைத்த பட்டிகள் அக்கினியில் கனிந்து கொண்டிருந்தன.

தீ நாக்குகளில் சிக்கிய மிருகங்களின் ஓலம்...

அவலக்குரல் எழுப்பி அழுவோரும், சிதறி ஓடுவோரும்.

பொருட்களை இழந்தோரின் பரிதவிப்பு...

செய்வதறியாத பிஞ்சுக் குழந்தைகள்...

எல்லாமே வெறியாட்டத்தின் விளைவுகள்...

மனத்தைக் குமட்டும் நெடியும் புகையும்...

நேரம் நிதானமாகக் கடந்து கொண்டிருக்கின்றது.

அக்கினி தேவனின் வெறி தணிந்து கொண்டபோது லயத்தின் தகரங்கள்கூட உருகிக் கிடந்தன.

விக்கினங்கள் செய்தவர்கள் விரைவா மறைந்து விட்டார்கள்.

அசாத்திய துணிவில் ஏதேதோ பொருட்களைக் காப்பாற்ற முனைந்த இளைஞர்கள் தீக்காயங்களுடன் எரிந்த வீடுகளிலிருந்து வெளியேறினார்கள்.

காலையில் கிழவன் நம்பிக்கையுடன் பூட்டிச்சென்ற வீடு கோரமாகக் காட்சியளிக்கின்றது.

தாத்தா நான் முதல்ல உங்க வீட்டுப் பொருட்களைத் தான் காப்பாத்தப் பார்த்தேன். நாங்கள் என்றாலும் பரவாயில்லை... நீங்க ஊருக்குப் பயணமாச்சே... என்ன செய்யப் போறீங்க...... செட்டாக அடுக்கிக் கட்டிவைக்ச உங்க பொருட்களெல்லாம் ஒரேயடியாக எரிஞ்சிபோச்சி... உடுதுணிகள்கூட எடுக்க முடியல... உங்க பாஸ்போட், பணம் எல்லாம் வெந்து சாம்பலாப்போச்சி கூறியபடியே மயங்கி விழுந்தான் இலட்சுமணன்.

தீக்காயங்களில் முகம் கருகிப் போயிருந்தது...

ரெங்கையாக் கிழவனுக்கு உலகம் தலைகுப்புறப் புரண்டு வானம் இடிந்து வீழ்ந்ததுபோல் இருந்தது.

முருகா... முருகா... என்ன அநியாயம், அடுக்குமா...? நான் என்ன குற்றம் செய்தேன் என்று முகத்தில் அறைந்துகொண்டான். யாரோ ஒரு பெண் தாத்தா... என்று கட்டிப்பிடித்துக் கதறினாள்.

தானும் அந்த அக்கினியில் மூழ்கி சங்கமமாகிவிடலாம்போலிருந்தது கிழவனுக்கு.

இந்த நாட்டிற்கு என்ன நடந்துவிட்டது. ஏன் இந்த அட்டூழியங்களெல்லாம்...... நாங்கள் என்ன தவறு செய்தோம். இங்கு ஏன் மனிதர்கள் மிருகங்களாகி விட்டார்கள். கிழவன் புரியாது பொறிகலங்கி நின்றான்.

நாங்கள் நன்றி மறக்கவில்லை என்று கூறுவன போன்று, தவறணையில் நீவி— நீவி— தண்ணீர் போட்டு வளர்த்தானே அந்தத் தேயிலைச் செடிகள் லயத்தைச் சுற்றிக் கருகிக் கிடக்கின்றன.

(யாவும் கற்பனை)

ஆங்கிலம் திருத்திய தமிழ் மாணவன் →

மாணவனாக இருக்கும்போதே ஆங்கில இலக்கணப் புத்தகமாகிய "நெஸ்பீல்ட் கிறம"ரில் சில தவறுகளைச் சுட்டிக்காட்டிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய தமிழ் மாணவன் யார் தெரியுமா? அவர்தான் அகிலம் போற்ற ஆங்கிலத்தை அழுத்தம் திருத்தமாகப் பேசிய மகாகனம் சீனிவாஸ் சாஸ்திரியாரவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகட்டில் பாழாகாதே

கட்டுக்கடங்காத ஆசைகள் எமது மனத்தைப் பற்றிக்கொள்ளும்போது நிதானபுத்தியை நாம் இழந்து விடுகின்றோம். இந்த உண்மை சீதையினதும், இராமனை அவளிடமிருந்து பிரிப்பதற்கு இராவணனால் ஏவப்பட்ட மாரீசனாகிய மாய மானினதும், உன்னதமான கிளைக் கதையில் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. சோகமான இக்கதை அனைவருக்கும் நன்கு தெரியும்.

நிதான புத்தியை மாசுபடாது உறுதியுடன் பேணுவதற்குக் கட்டுக்கடங்காத ஆசைகளை நாம் விலக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதற்காகவே அதனை நான் இங்கு குறிப்பிடுகின்றேன்.

தனது முன்பு துள்ளிக்குதித்து, இங்கும், அங்கும் திரிந்த அந்த மானின் கண்கவர் தோற்றத்தையும் தங்கத்தைப் போலவும், மதிக்கவொண்ணா மாணிக்கத்தைப் போலவும் ஒளிரும் அதன் லாவண்யமான தோலின் எழிலையும் பார்த்துப் பேதை சீதை மயங்கிவிட்டாள்.

''அந்த மானை உயிரோடு பிடியுங்கள். நாம் அரண்மனைக்கு ஏகும்போது அதனைக் கொண்டு சென்று, எமது அன்பு மிகுந்த பரதனுக்கு அற்புதமான பரிசாகக் கொடுப்போம். உங்களால் அதனை உயிரோடு பிடிக்க இயலாவிட்டால் அதனைக் கொல்லுங்கள். அழகு வாய்ந்த அதனுடைய தோலை எமது வனவாசத்தின் அடையாளச் சின்னமாகப் பரதனுக்குக் கொடுப்போம்."

இவ்வண்ணம் சீதை அவனைக் கெஞ்சி வேண்டிக்கொள்ள, அவளின் அன்புக்கட்டளையிலே கட்டுண்ட இராமன், இலக்குமணன் போகவேண்டாம் என்று இயம்பிய எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது சென்றான். இராமனை நெடுந்தூரம் அலைத்துக் கூட்டிச் சென்ற சாதுரியமான அந்த மான், அவர் அபயக்குரல் எழுப்புவதுபோல் அவரின் குரலிலே சத்தமிட்டது.

எல்லையற்ற பயம் சீதையை ஆட்கொண்டபோது, அவள் நிதான புத்தியை இழப்பதை நாம் மீண்டும் காண்கின்றோம். இராமனைத் தேடிச்சென்று அவரை மரணத்திலிருந்து காக்குமாறு அவள் இலக்குமணனைத் துரத்தினாள்.

மயக்கும் ஆசைகளால் கவரப்படாது, நாம் அவற்றை விலக்க வேண்டியதன் அவசியத்தைப் போதிப்பதற்கு வால்மீகியால் இக்கதை எமக்கு அருளப்பட்டது. எமது வாழ்க்கையிலே எம்மை மயக்கிச் சிக்கலில்வீழ்த்துவதற்கு மாயமான் பலவித வடிவங்களில் வருகின்றது. அவ்வேளைகளில் பேதை சீதை அனுபவித்த துன்பத்தை நினைவிலே கொண்டு எம்மை நாமே காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

பலவிதமான ஆசைகளினால் நாம் தாக்கப்படலாம். நல்ல ஆசைகளுக்கு நாம் இடமளிக்கும் வேளையிலேகூட, மனதைக் கடுமையான கட்டுப்பாட்டுடன் கண்காணிக்க முயற்சிக்க வேண்டும்.

நன்றி: பவான் ஜேர்னல் ராஜாஜி

மொழி பெயர்ப்பு: நவாலியூர் நடேசன்



பஸ் சாரதி; எனக்குப் பள்ளிக்கூட பஸ் ஓட்டப் பயமாயிருக்கு.

ஒருவர்; ஏன்?

பஸ் சாரதி; துப்பாக்கி முனையில் பயமுறுத்தி பஸ்ஸைத் தியேட்டருக்குத் திசை திருப்பி விடுவார்களோ மாணவர்களெனப் பயமாயிருக்கு!

மழை வந்திட்டா ரோட்டில் உள்ள பைப்பில் தண்ணி எடுக்கிற பிரச்சினை இல்லை.

ஏன்?

நம்ம வாடகை வீடு வானம் பார்த்த வீடு... மழைத் தண்ணி பாத்திரங்களை நிரப்பிக் கொள்ளும்.

ஒருவர்: பருத்தித் துறையில் இருந்து அச்சுவேலிக்கு எடுத்த டிக்கற்றோடு யாழ்ப்பாணம் வந்திட்டன்.

நண்பன்: ஏண்டா நம்ம இ போ சாவிற்கு நஷ்டம் விளைவிக்கிறாய்?

ஒருவர்: நஷ்டமா... வல்லையில் இருந்து பஸ்ஸைத் தள்ளி வந்திருக்கிறேன்.

- அதிமதுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா கோப்பிக்கு நிகர் அண்ணா கோப்பியே!



அண்ணா கோப்பி

தயாரிப்பாளர்:
அண்ணா தொழிலகம், இணுவில்.

அழகுக் கலைக்
கோலம் தரும்
அற்புதப்
புடவைத் தினிசுகளுக்கு
ஒப்பற்ற இடம்
சிங்காரம்ஸ்

நங்கையர் நாடும் நவநாகரீக நகைகளுக்கு
டைமா நகை மாளிகை
செட்டியார் தெரு, — கொழும்பு.
தொலைபேசி: 20875

மில்க்வைற்
தயாரிப்புகளுக்கு

நீங்கள் கொடுக்கும்
ஆதரவு
நாட்டின்
பொருளாதார
வளர்ச்சிக்கு
கொடுக்கும்
ஆதரவாகும்.

MWS
மில்க்வைற்

யாழ்ப்பாணம். தொலைபேசி. 7233

புத்திரசிகாமணி

கடற்கரையோரமாகவுள்ள தனது வீட்டில் வசித்து வந்த கலிபோர்னியா வாசியொருவர் தனது வீட்டு குளியலறையை கடற்கரைக்கு மிக அருகில் கட்டியிருந்தார். ஒருநாள் அவரது மகன் விளையாட்டாக தனது முழுப்பலத்தையும் அக்கட்டடத்தில் பிரயோகித்து அந்த மலசலகூடத்தைக் கடலினுள் சாய்த்துவிட்டான். சிறிதுநேரத்தின் பின் தந்தை வீட்டு வேலையாட்களை விசாரித்துக் கொண்டிருப்பதைக் கண்ட தனயன் ஓடிவந்து, அப்பா நான்தான் கட்டடத்தைத் தள்ளிவிழுத்தினேன் என்றான். தந்தையோ எழுந்துநின்று தனது மகனுக்கு நன்றாக அபிஷேகம் செய்தார். எதிர்பாராத உதைகளைச் சமாளிக்க முடியாமல் ''உண்மைக்குப் பரிசு உதைதானா?" என்று தந்தையை நோக்கி கூவிய மகன் முன்பு நடந்ததொரு உண்மை நிகழ்ச்சியைக் கூறத்தொடங்கினான்.

அதாவது... ''அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த வாஷிங்டன் சிறுவயதினனாக இருக்கும்போது தனக்கு பரிசாகக் கிடைத்த கத்தியின் கூர்மையைப் பார்க்கும் ஆவலில், தந்தையார் மிகவும் அருமையாக வளர்த்துவந்த திராட்சைச் செடியை இரு துண்டுகளாக வெட்டினான். பின்பு தனது தகப்பனார் திராட்சைச் செடியை வெட்டியவனைத் தேடுவதை அறிந்த வாஷிங்டன் நேரேசென்று தான் கத்தியின் கூர்மையை அறியும் ஆவலில் செய்ததாவும், தன்னை மன்னிக்கும்படியும் தகப்பனை வேண்டினான். தகப்பனார், அவன் உண்மை பேசியதைக்கண்டு சந்தோஷப்பட்டு அவனுக்கு ஒரு பரிசும் கொடுத்தார்.'' என்று நிறுத்தியவன் வாஷிங்டனின் தந்தையார் உண்மைக்குப் பரிசு கொடுத்தார். நீரென்னவென்றால் உண்மை சொன்னதற்கு என்னை உதைக்கிறீரே இது சரியா என தந்தையிடமே முறையிட்டான்.

அதற்கு அவனின் தந்தை கூறினார், ''மகனே! நானும் அதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நீ ஒன்றை மட்டும் மனதில் வைத்துக்கொள். அதாவது வாஷிங்டன் முந்திரிகை மரத்தை வெட்டியபொழுது அவனின் தந்தை அம்மரத்தின் மேலிருக்கவில்லை'' என்றார்.

மகனுக்கு உண்மை புரிய நேரமெடுக்கவில்லை.

இந்நகைச்சுவைப் பகுதியை அனுப்பி உதவியவர்:
ஜோய் எட்வின் (மேற்கு ஜேர்மனி)

மணிவாசகம்

இளமையில் சேகரி; முதுமையில் செலவிடு. உன் இரகசியங்களை அடக்கமாக வைத்துக்கொள்.

- ஸ்டீபன் அலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பன் பக்தன். மகன் திருடன்.

! ! !

அப்பன் நவக்கிரகத்தைச் சுற்றி வருவான்... மகன் நவரத்தின மாளிகையைச் சுற்றி வருவான்.

பசு பாசம்

சுவாமி விவேகானந்தர் பாரத மக்களின் வறுமையையும், உடல் வலிமையின்மையையும் கண்டு வருந்தியவர். ஒருசமயம் பசுக்களைக் காக்கும் இயக்கத்தினர் அவரிடம் வந்து தமது இலட்சியத்தை எடுத்து விளக்கி, அவருடைய ஆதரவையும் கேட்டனர். அதற்கு அவர், ''வறுமையில் பசியாலும், நோயாலும் அழுந்தும் மக்கள் நிலை உங்களுக்குத் தெரியவில்லையா?'' எனக் கேட்டார். வந்தவர்கள், ''அது அவர்களின் கர்மபலன்'' என்றார்கள். உடன் விவேகானந்தர், பசுமாடுகளும் துன்புறுவது அவற்றின் கர்மபலன்தானே" எனப் பளிச்செனக் கேட்டார். வந்தவர்கள் வாயடைத்து நின்றனர்..

டெலிபோனைக் கண்டு பிடித்து முதன் முதலாகப் பேசிய வார்த்தைகள் என்ன தெரியுமா?



''உடனே வாருங்கள் மிஸ்டர் வாட்ஸன்! உங்கள் உதவி தேவை!

சிந்தனைக்கு

ஆளப்படுவோரைப் பயமுறுத்த வேண்டுமானுல், ஆளுவோரின் மாளிகை ஆடம்பரமாக இருக்க வேண்டும். இது ஏகாதிபத்திய காலப் பயமுறுத்தலைத்தான் காட்டுகின்றது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டது புதுடில்லி ராஜ்பவனம். புதுடில்லியில் வைஸ்ராய் மாளிகை பெரிய அளவில் கட்டிமுடிக்கப்பட்டபோது, ஏழை நாட்டின் வைஸ்ராய்க்கு இவ்வளவு பெரிய மாளிகையா என்று கேட்டார்கள், காங்கிரஸ் தலைவர்கள். இந்த மாளிகைக்கு 'வெள்ளை யானை' என்று பெயர்வைத்தது காங்கிரஸ் கமிட்டி. இந்தியா விடுதலை அடைந்தால் டில்லியிலுள்ள வைஸ்ராய் மாளிகை ஏழைகளுக்கு மருத்துவமனையாக்கப்படும் என்ச் சொன்னுர் காந்தியடிகள்.

இந்தியா விடுதலை பெற்றுக் கால் நூற்றுண்டு காலமாகியும் வைஸ்ராய் மாளிகை ஜனுதிபதி பவனம் ஆனதைத் தவிர ஏழைகளின் மருத்துவமனையாகவில்லை.

— மாஸ்கோவிலிருந்து லண்டன்வரை என்ற நூலில் இருந்து —

ம. பொ. சி.

பரிணாம வளர்ச்சி

பரிணும வளர்ச்சியின் படி மனிதனின் உடல் வளர்ச்சி, உள்ளவளர்ச்சியைப் பொறுத்தது

அதற்கு என்ன இப்போ?

மனிதனின் இலஞ்சம் வாங்கும் வழக்கம் வளர்ந்துகொண்டு போவதால் முதுகில் ஒரு கை முளைத்தாலும் முளைத்துவிடும்.

- ஜோக்கிரட்டீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி ——— பெரிதா ?
மதி ——— பெரிதா

இந்தியாவின் முன்னுள் ஜனுதிபதியாக இருந்த தத்துவஞானி ராதாகிருஷ்ணனை மேல் நாட்டுப் பத்திரிகை நிருபர் ஒருவர் "விதி பெரிதா? அல்லது மதி பெரிதா? என ஒரு கேள்விக்கணையை விடுத்தார். அதற்கு அவர் "சீட்டு விளையாடும்போது நமது கைக்குத் தரப்படுகிறதல்லவா சீட்டு - அது விதி. கிடைத்த சீட்டை வைத்து விளையாட்டில் வெற்றி பெற முயல்கின்ருேமே - அதுதான் மதி" எனப் பதில் கொடுத்தார்.

ஓரமொரு

ஒருவர்: நீங்கள் துறவியாக இருந்துகொண்டு தலை கீழாக நடப்பதைப் பார்க்கக் கவலையா யிருக்கு...

துறவி: என்ன கவலை?

ஒருவர்: தலைகீழாக நடப்பதால் அடுத்த பிறவியில் நீங்கள் வெளவாலாகப் பிறந்திடுவீர் களோ என்ற கவலை.

- அதிமதுரம்

வர்ண ஜாலம்



விவசாயியின் ப.ீனவி: உங்களுக்கு எந்த நிறம் பிடிக்கும்?

உத்தியோகத்தன் மனைவி: என்ன நிறம் பிடிக்குமென்று கேளாதை யுங்க... என்ன நிறம் பிடிக்கும் என்று கேளுங்க... எந்தக் கட்சி ஆட்சியிலிருக்கோ... அந்தக்கட்சி நிறம் பிடிக்கும்.

- அதிமதுரம்

கடவுள்: உனக்கு என்ன வரம் வேண்டும்?

திருடன்: நாட்டில் கலவரம்.

கேசரி

ஒருவர்: என் தம்பி ஒருமுறை தியாகி ஆகி இருக்கிருன்.

மற்றவர்: ஏன்?

ஒருவர்; பல்கனி ரிக்கற்றை எனக்குத் தந்திட்டு, கலரியில் போய் இருந்தவன்.

- கேசரி

Space Donated by
A
WELL WISHER

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றிக்கடன்

எனது கவித்துவத்தை
கௌரவித்து
போர்த்திய பொன்னுடை
கடன்காரன் முன்
முக்காடிட்டு
மறைந்து திரிய
உதவுகிறது.

- வர்மன்

ஆபிரிக்காவினூடாகத் தாய்நாட்டுப் பயணம்

இங்கிலாந்தில் அரசியல் விஞ்ஞானத்தில் மேற்படிப்புப் படித்துக்கொண்டு இருக்கையில் தாய்நாடாம் இலங்கைக்குச் செல்லவேண்டும் என்ற அவா ஏற்பட்டது. எனது ஆபிரிக்க நண்பர் ஒருவரும் பிரயாணத்துக்கு ஆயத்தமானர். அவர் என்னை ஆபிரிக்காவுக்கு வந்துவிட்டுச் செல்லுமாறு அழைக்கவே அதனை ஏற்றுக்கொண்டு முதலில் ஆபிரிக்காவுக்குச் சென்றேன். எமது விமானப் பிரயாணத்தின்போது அந்த ஆபிரிக்க நண்பர் சீனவைப் பற்றிய நூலொன்றினை எனக்குப் பரிசாகத் தந்தார். அந்த நூல் 1911-ம் ஆண்டுக்கு முன்பு சீனவில் நடந்த நிலப்பிரபுத்துவக் கொடுமையை விபரிக்கின்றது.

★ ★ ★

1911-ம் ஆண்டுக்கு முன்பு பிரபுக்கள் தனித்தனியே படை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டார்கள். அவர்களின் கொடுங்கோன்மையை எதிர்த்தவர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டார்கள். அவர்களின் கை, கால்களை வெட்டுவதும், அவர்களது பொழுதுபோக்காம். சுங்கான் பிடிப்பதற்கு ஆசைப்பட்டால் அடிமைகளின் தொடைகளை வெட்டி, அந்த எலும்பிலிருந்து சுங்கான் பிடிப்பார்களாம். நிற்கவோ, இருக்கவோ முடியாத இரும்புக்கூடுகளில் அவர்களை வைத்துச் சித்திரவதைப்படுத்துவார்களாம். ஒரு நிலப்பிரபு மாடு வாங்கவேண்டுமென்ருல் இரண்டு மனித அடிமைகளைப் பண்டமாற்ருகக் கொடுக்க வேண்டியிருந்ததாம். இவ்வாறு தொடர்ந்து செல்கின்றது அந்த நூல். அப்பப்பா இந்த இருதாற்ருண்டுகளில் முதலாளித்துவம் எத்தனை கொடுமைகளை விளைவித்தது என்று நினைத்துக் கொண்டிருக்கையில் - விமானம் ரொடீசியாவை அடைந்தது.

★ ★ ★

ரொடீசியாவை அடைந்ததும் எனது ஆபிரிக்க நண்பர் என்னை ஒதுக்குப்புறமான ஒரு ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துச் சென்ருர். அங்கே உயர்தர வகுப்பில் படித்துக்கொண்டிருந்த ஒரு மாணவனிடம் என்னை அறிமுகப்படுத்திவைத்தார். என்னுடன் கை குலுக்கிவிட்டுப் புன்முறுவலுடன் அமர்ந்தான், அம்மாணவன். சற்று அம்மாணவனுடன் பேச்சுக்கொடுத்தேன். ''உங்கள் நாட்டில் வெள்ளையரின் சிறுபான்மை அரசாங்கம் எப்படியிருக்கிறது?'' என்று பேச்சைத் தொடங்கினேன். அம்மாணவன் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டுப் பேச்சைத் தொடங்கினன். ''சார்... இந்த நாட்டில் வெள்ளையன் குடியேறுகையில் அவனிடம் பைபிளும், எங்களிடம் நிலமும் இருந்தது. ஆனல் இப்போது நம்மிடம் பைபிளும், அவனிடம் நிலமும் இருக்கின்றது. அதுமாத்திரமல்ல சார்... வடரொடீசியா தாமரச் சுரங்கங்களில் ஐரோப்பியனுடைய சம்பளத்தில் இருபதில் ஒரு பங்குக்கும் குறைவாகவே ஆபிரிக்கத் தொழிலாழிக்கு வழங்கப்படுகின்றது; என்று தனது பேச்சை நிற்பாட்டினன் அம்மாணவன். அப்பாடா... முன்னேற்றம், முற்போக்குப் பேசும் இவ்வுலகிலே இவ்வாருன கொடுமைகள் நடக்கின்றதா என எண்ணிக் கொண்டிருக்கையில் அம்மாணவன் தொடர்ந்து பேசினன்.

அதுமட்டுமல்ல சார்... இந்த நாட்டின் சொந்த மக்களில் முப்பது சத விகிதத்தினருக்கு ஓர் அங்குல நிலம்தானும் இல்லை. பிரதமர் இயன்சிமித்துக்கு இரு

'பாரதி'ப் பழக்கம்

பாரதியார் கவிதை - செய்யுள் நூல்களைப் படிக்கும்போது சுவையில்லாத, பொருளில்லாத பாடல்கள் அதில் இருந்தால் உடனே அதனைக் கிறுக்கியோ, அழித்தோவிடுவாராம்.

பத்தையாயிரம் பரப்பளவைக் கொண்ட இரண்டு பெரும் தோட்டங்கள் இருக்கின்றன. இங்கு வாழ்கின்ற இரண்டு இலட்சத்து எழுபத்தையாயிரம் கறுப்பர்களுக்குள் எண்பத்தேழாயிரம் பேருக்கு வாக்குரிமை இருக்கின்றது. ஆனல் அறுபது இலட்சம் கறுப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குள் ஏழாயிரத்து ஐநூறு பேருக்கு மட்டும்தான் வாக்குரிமை உண்டு; என்று நிற்பாட்டினான் அம்மாணவன்.

அப்பாடா என்று ஒரு பெருமூச்சுவிட்டேன். அது மட்டுமல்ல சார்... சமீபத்தில் இயன்சிமித் அரசாங்கம் சுதந்திரதாகம் கொண்ட 18 ஆபிரிக்க மக்களை உயிருடன் சுட்டெரித்து இருக்கின்றது என்று நிற்பாட்டினான் அம்மாணவன். அப்பாடா... என்று இரண்டாவது பெருமூச்சு விட்டேன்.

இரண்டு நாட்கள் ரொடீசியாவில் தங்கியிருந்துவிட்டு, அங்கிருந்து எனது ஆபிரிக்க நண்பருடன் ஸாம்பியா பயணமானேன்.

■ ■ ■

ஸாம்பியா சென்றடைந்த நான், எனது நண்பர் ஒருவரைத் தேடியலைந்தேன். அவர் இருக்கும் இடம் ஸாம்பியாவின் எல்லை நகரமான பெய்ரோ ஆகும்.

✻ ✻

மாப்பிளைக்கு அரசியல் ஈடுபாடு இருக்குமே! அவர் ''லெப்டிஸ்டா'' அல்லது 'றைட்டிஸ்டா"

அவர் ரைப்பிஸ்ட்.

✻ ✻

நான் அங்கு சென்றபோது அந்த நகரின் மீது ரொடீசியா ஜெட் விமானங்கள் குண்டுவீச்சு நடாத்தியதாக ஸாம்பியா வானொலி அறிவித்தது. எவ்வித இடர்ப்பாடுகள் ஏற்படினும், எனது நண்பரைச் சந்திப்பேன் என்ற வைராக்கியத்துடன் அலைந்துதிரிந்தேன். கடைசியாக அந்த நண்பர் இலங்கைக்குச் சென்றுவிட்டதாகத் தகவல் கிடைத்தது. எனவே, அங்கிருந்து எதியோப்பியாவுக்கு எனது ஆபிரிக்க நண்பருடன் வந்து சேர்ந்தேன்.

நான் செல்லும் ஆபிரிக்க நாடுகள் எங்கும் இனப்பிரச்சினையும், பூசலும், கலகமும் இருந்தன. எனவே எங்கும் அமைதியாக இருக்கமுடியவில்லை. எனவே எதியோப்பியாவிலாவது அமைதியாகஇருக்கலாம் என்று எண்ணினேன்; ஆனால் முடியவில்லை. நான் சென்றிருந்த சமயம் சோமாலியாவுக்கும், எதியோப்பியாவுக்குமிடையில் கலகம் நடந்தது. வடகிழக்கு எதியோப்பிய நகரமான - நிஜிகா மீது, தாக்குதல் நடாத்திய சோமாலியா போர் விமானங்கள் மூன்று சுட்டு வீழ்த்தப்பட்டன. அடிஸ் அபாபாவின் கிழக்கே ஹரால் பிரதேசத்திம் சோமாலியாவின் போர் வீரர்கள் 35 பேர் கொல்லப்பட்டதாகவும், அரபு வங்கி நோட்டுக்கள் அங்கே பெருந்தொகையாகக் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் எதியோப்பியா அறிவித்தது.

■ ■ ■

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. ''ஆபிரிக்கர்கள் அதிகம் தூங்குபவர்கள்'' என்று. ஆனால் இன்றைய ஆபிரிக்காவை நோக்கும்போது, அது எகாதிபத்திய எதிர்ப்பும், போராடும் வலுவும் கொண்ட நாடுகளாகவே இருக்கின்றன. தம்மைத்தாக்கும் அயல் நாடுகளை உக்கிரமாக அவை தாக்கித் தள்ளுகின்றன.

ஆபிரிக்காவில் ஒரு நாட்டின் பெயர் மவுறிற்றுனியா. இதன் தலைவர் மொக்ரர் அவுல்ட் டட்டா. இந்த நாட்டின்மீது மேற்குச் சகராவின் பொலிசாறியா என்ற புரட்சிப்படைகள் தாக்குதல்கள் நடாத்தின. இத்தாக்குதல்களில் 65 மவுறிற்றுனியர்கள் கொலை செய்யப்பட்டனர். இங்கு வேலை செய்த பல பிரெஞ்சுக்காரர்கள் இப்புரட்சிப்படைகளின் தாக்குதலுக்கு அஞ்சி அந்நாட்டைவிட்டுப் புறப்பட்டுவிட்டார்கள்.

■ ■ ■

எனது ஆபிரிக்க நண்பரின் சொந்த நாடு எதியோப்பியா. அவரிடம் இருந்து விடைபெற்றுக்கொண்டு செய்ரோவூடாக தாய்நாடு திரும்பத் திட்டமிட்டு எகிப்தின் தலைநகரான செய்ரோவை வந்தடைந்தேன். அங்கு விமானத் தாமதத்தால் ஒருநாள் தங்கவேண்டி நேரிட்டது. யாழ்ப்பாணம், கோப்பாய், நீர்வேலி, ஆவரங்கால், அச்சுவேலி, வல்வெட்டித்துறை ஆகியன எவ்வாறு நெருக்கமாக அமைந்திருக்கின்றனவோ அது போல எகிப்து, சிரியா, யோர்டான், லிபியா, சூடான் இடங்களும் அமைந்திருக்கின்றன. எகிப்தும், லிபியாவும் ஒன்றாக இணையவேண்டுமென ஒரு காலம் இரு

எழுத்தோவியம்

முன்பு —
எழுத்தாணியால்
எழுதிய காலத்தில்
ஆணித்தரமான
அழியாத காவியங்கள்
பிறந்தன;
இன்று —
'மை'யால்
எழுதும் காலத்தில்
அருமையான
காவியங்கள் ஒன்றும்
உருவாகவில்லையே.

— பாமகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு மக்களிடையேயும் அதிக சினேகிதம் நிலவியது. ஆனால் நான் கெய்ரோவில் தங்கியிருந்த சமயம் லிபியாவுக்கும், எகிப்துக்குமிடையில் பயங்கரமான சண்டை நிலவியது. ஆ... காலம்தான் எவ்வளவு கொடுமையான அரக்கன் என்று எண்ணிக்கொண்டு தாய் நாடு நோக்கிப் பயணமானன்.

■ ■ ■

கொழும்பை வந்தடைந்த நான், யாழ்தேவியில் ஏறிச் சொந்த ஊராம் யாழ்ப்பாணத்தை நோக்கிப் பிரயாணமானேன். யாழ்ப்பாணம் வந்தடைந்த நான் மிகுந்த பசிக்களைப்புடன் ஒரு தேனீர்க்கடைக்குச் சென்றேன். அந்தக் கடையின் ஒரு பக்கத்தில் மூன்று அரசியல் வாதிகளின் படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன.

அவர்கள் ஸ்ரீமாவோ அம்மையார், இந்திராகாந்தி, பூட்டோ ஆகியோராகும். அவர்களின் படங்கள் என் சிந்தனையைக் கிளப்பிவிட்டன. ''ஆற்றங்கரையில் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே'' என்று ஔவை பாடிய பாடலே நினைவுக்கு வந்தது. பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ அம்மையார் சாதாரண எம். பி. யாகி விட்டார். யூகோசலேவியாவுக்குப் பிரயாணமான அம்மையாரின் 8 இருத்தல் தேயிலைக்கும் வரிவிதிக்கப்பட்டது எனப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தியாவை ஒரு வல்லரசு என்ற நிலைக்குக் கட்டியெழுப்பிய இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா தமது உத்திரப் பிரதேசத்தில் தனது கட்சியான காங்கிரசுக்கு ஒரு ஸ்தானத்தையும் எடுத்துக் கொடுக்க முடியவில்லை. முடி இழந்த இந்திராவை ஜனதா ஆட்சியினர் கைது செய்த காட்சி; நாளைக்கு எதுவும் நிலையில்லை என்பதையே காட்டுகின்றது. அதுபோல் பாகிஸ்தானை ஆட்டிப்படைத்த பூட்டோ கொலைக்குற்றவாளியாகிச் சிறைக்கூண்டில் தூங்குகின்றார்.

ஓ... உலகமே... நாளைக்கு என்ன நடக்குமோ யாரறிவார்.

ஆடவர்க்கும், அரிவையர்க்கும்,
திருமணத்தை எதிர்பார்க்கும்
நங்கையர்க்கு, தோழர்கட்கு

★ சேட்டிங்
★ சூட்டிங்
★ சாறிகள்

பெறுவதற்கு

நம்பிக்கையானதொரு பிடவை மாளிகை.

நியூட்டோன் ரெக்ஸ்ரைல்ஸ்

பிரதான வீதி, கிளிநொச்சி.



உயர்கணிதம்

ஆசிரியர்: ஒரு ஆட்டிற்கு நாலு கால்... நாலு ஆட்டிற்கு எத்தனை கால்?

மாணவன்: சேர்... என்ன சேர் நான் இடையனைப் போறேனென்று ஆட்டுக் கணக்குப் படிப்பிக்கிறீங்க... ஆகாய விமானத்தை வைத்துக் கணக்குக் கேளுங்க.

— ஜோக்கிரட்டீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை அழைத்தாள்

- இளங்கீரன்

இருவரும் ஹோட்டல் வீதியில் இறங்கியதும் பிஞ்ஞங் நகரத்தையும், அதற்குமுன் தான் பார்த்தறியாத புதுமைகளையும் கண்டு களிக்க வேண்டுமென்ற ஆவலில், 'நாங்கள் பிறகு பேசிக் கொள்ளலாம். முதலில் நகரத்தைச் சுற்றிப் பார்ப்போம் என்றான் ரவி.

பகலையும் விட இரவில்தான் பிஞ்ஞங் அழகாயும், குதூகலமாயும் இருக்கும். நாங்கள் நேரே பீச்சுக்குப்போய் கொஞ்ச நேரம் இருந்துவிட்டு வருவோம்" என்று சொல்லிக் கொண்டே வந்து கொண்டிருந்த சைக்கிள் ரிக்ஷாக்களில் ஒன்றை நிறுத்தினார் புண்ணியமூர்த்தி. ரவீந்திரன் மறுக்கவில்லை. தந்தையுடன் அதில் ஏறிக்கொண்டான்.

பீச்சில் குட்டியும், குழந்தையுமாக, பெரியவர்களும், சிறியவர்களுமாக, வாலிபர்களும், யுவதிகளுமாக, காதலர்களும் தம்பதிகளுமாக வண்ண வண்ண ஆடைகளுடன் கும்பல்கும்பலாகவும், சோடிசோடியாகவும், தனித்தனியாகவும் நிறைந்திருந்தனர். சிறுவர்கள் பலூன் பறக்கவிட்டும், கொடிகள் ஏற்றியும், கிளித்தட்டு, கிட்டியடித்தல், இருல் பாய்தல் போன்ற மற்றும் பல விளையாட்டுக்களிலும் திளைத்திருந்தனர். பிள்ளைகள் மணலால் வீடும் கோபுரமும், தங்களுக்குத் தோன்றியதையும் எழுப்புவதும், கலைப்பதுவுமாய் இருந்தனர். வாலிபர் சிலர் மல்யுத்தம் செய்தும், பலர் கடலில் பாய்ந்து நீந்தி விளையாடிக் கொண்டும் இருந்தனர். படகு விளையாட்டுக்களிலும் போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. ஐஸ்பழம், இனிப்புப் பண்டங்கள், உணவுப் பதார்த்தங்கள், கடலை கச்சான், பழங்கள், பலூன்கள், பட்டங்கள் இவற்றையெல்லாம் விற்கும் அங்காடி வியாபாரிகளும், அவர்களின் வேடிக்கையான கோமாளி உடுப்புக்களும்; அங்கு காணப்பட்ட எல்லாமே ஒரு ரம்மியமான சூழ்நிலையை உருவாக்கியிருந்தன.

இந்த அழகிய பீச்சையும், பல்வேறு பருவத்திலும் நிறத்திலும்' நிலையிலும், விதத்திலும் உள்ள பல ஜாதி மக்களையும், அவர்களின் கலகலப்பையும் கண்டதும் ரவீந்திரனுக்குப் பெரும் உற்சாகமாகவும், கிளுகிளுப்பாகவும் இருந்தது. கடலுக்குள் விழுந்து கொண்டிருக்கும் அஸ்தமனச் சூரியனின் வண்ணக்கோலங்களையும், அவற்றைப் பிரதிபலித்த கடலின் அழகையும்விட பீச்சின் காட்சிகள் ரவீந்திரனை அதிகம் கவர்ந்தன. சில சமயங்களில் இயற்கையின் எழிற்காட்சிகளை விட இப்படியான மனிதர்களின் காட்சிகள் அதிகம் இன்பத்தைத் தருமோ என்று வியந்தவாறு, சற்றுத்தள்ளி மணலில் அமர்ந்திருந்த தந்தையை நோக்கி நடந்தான்.

மகனையே அவதானித்துக் கொண்டிருந்த புண்ணியமூர்த்தி, அவன் அருகில் வந்து அமர்ந்ததும், "இலங்கையில் இப்படியான பீச் இல்லை என்றார்."

"யாழ்ப்பாணத்தில் - அதாவது டவுனில் இல்லைதான். ஆனால் பருத்தித்துறை, திருகோணமலை, முல்லைத்தீவு, நீர்கொழும்பு, கல்முனை, அம்பாந்தோட்டை இங்கெல்லாம் பீச் இருக்குதே'' என்றான் சிரித்துக் கொண்டே.

"கடலுக்கு மத்தியில் எங்களின்ர இருக்குது. அதனாலே அதைச் சூழ்ந்த இடமெல்லாம் பீச் என்று சொல்லலாந்தானே. அதுசரி, நீர்சொன்ன இடங்களுக்கெல்லாம் போயிருக்கிறீரோ?''

"ஓம்... அம்பாந்தோட்டையைத் தவிர"

"அங்கெல்லாம் இப்படியான காட்சிகளைப் பார்த்திருக்கிறீரோ?"

இல்லை. ஏனோ, இலங்கையில் உள்ள சனங்கள் பீச்சை அனுபவிப்பது குறைவு; கொழும்பு கோல்பேஸில்தான் ஓரளவு இம்மாதிரியான காட்சிகளைக் காண முடியும். ஆனால், கோல்பேஸ் பீச் அல்ல.''

புண்ணியமூர்த்தி இலேசாகப் புன்னகைத்தார். "கோல்பேசைப் பற்றி நீர் சொன்னது சரிதான். அங்கே இதுபோல

○ **கவிதை** ○

"கவிதை மரபுக்கவிதையா, வேறுவிதக் கவிதையா என்பது பிரச்சினையே அல்ல, கவிதையாக இருக்க வேண்டுமென்பது தான் முக்கியம்.''

- டி. எஸ். எலியட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைவெளேரென்ற மணற் பரப்பு இல்லை. புற்கள்தான் இருக்கின்றன. அதனால் தான் அதற்கு கோல்பேஸ் கிறீன் என்று பெயர் வைத்திருக்கிறார்கள்." என்று சொல்லி நிறுத்தியவர், இரண்டொரு வினாடிகள் மௌனமாக இருந்துவிட்டு, "நான் பினாங்குக்கு வாறபோதெல்லாம் பெரும்பாலும் பின்னேரப் பொழுதை இங்கேதான் கழிப்பேன்." என்று ஒருவித உற்சாகத் தொனியில் கூறினார்.

ரவி லேசாய்ச் சிரித்தவாறு, "உங்களுக்கு இந்தப் பீச்சும், சனங்களின் இந்தக் காட்சியும், அழகும் பிடிக்கும்போல." என்றான்.

"அதுக்காக அல்ல. என் கடந்தகால வாழ்க்கையைத் திரும்பவும் அனுபவிக்கிறதுக்காக இங்கே வாறது வழக்கம்"

ரவி புரியாதவாறு தந்தையைக் கேள்விக்குறியுடன் பார்த்தான்.

புண்ணியமூர்த்தி, தனக்குள் சொல்லிக்கொள்வதுபோல கடலை நோக்கியவாறு பேசத் தொடங்கினார்.

"மனிதன் தன்ர கடந்தகால வாழ்க்கையை நினைச்சுத் திரும்பவும் மனதால் வாழ்கிறது அவனுடைய இயல்புகளில் ஒன்று நானும் அதுக்காகத்தான் இங்கே வருவேன். ஈப்போவில் பீச் இல்லை. தனிமையில் ஓய்வாயிருந்து அந்த வாழ்க்கையை அனுபவிக்கிறதுக்கு ஏற்ற இடம் இந்த பீச். இங்கே வந்து இருந்ததும் இந்தக் காட்சிகளில் என் கவனம் செல்லாது. இந்தக்கடல் வழியாகத்தான் இங்கே - மலேயாவுக்கு வந்தேன். ஆகையால் இந்தக் கடலைப் பார்த்ததும் இதுக்கு அப்பாலுள்ள நம்ம ஊருக்கு என் நினைவுகள் பறந்தோடும். நான் மலேயாவுக்கு வரும்வரை ஊரில் வாழ்ந்த வாழ்க்கை படம்போல் திரியும். அதிலும் உம்முடைய அம்மாவுடன் ஒன்றிணைந்து விடுவேன். நீர் இங்கே வருவதாகத் தந்தி கிடைத்ததும், நான் உடனே ஈப்போவிலிருந்து பினாங்குக்கு வந்திட்டேன். கப்பல் வரும்வரை பின்னேரப் பொழுதை நான் இந்தப் பீச்சிலேயே கழித்தேன். எனது கடந்தகால வாழ்க்கையைத் திரும்பவும் ஒரு வாரம் உமது அம்மாவுடன் அனுபவித்தேன். அவவுடன் வாழ்ந்தேன்" என்று சொல்லி நிறுத்தினார்.

ரவீந்திரன் அவரைப் பிரமிப்புடன் பார்த்தான். அவன் கூட தனது பழைய நினைவுகளில் மூழ்கும்போதும் தனது கதைகள், நாவல்களில் வரும் பாத்திரங்கள் இந்த நினைவுகளில் லயிப்பதை எழுதும்போதும் தந்தை இப்போது சொன்னதுபோல் இந்த வார்த்தைகளில்... இந்த விதத்தில் சொன்னதில்லை. "என் கடந்தகால வாழ்க்கையைத் திரும்பவும் உமது அம்மாவுடன் ஒரு வாரம் அனுபவித்தேன்; அவவுடன் வாழ்ந்தேன்." என்று சொன்னது புதுமையாகவும், அழகாகவும் இருந்தது. அதில் நிறைய அர்த்தம் இருப்பதாகவும்பட்டது. எழுத்தாளனுக்குத்தான் மனிதர்களின் உணர்ச்சிகளை, எண்ணங்களை, மனதை, வாழ்க்கையை அழகாகச் சொல்ல முடியும். மனிதனை இவ்வாறு இலக்கியமாக -கலையாகப் படைக்கும் திறன் அவனுக்கு இருப்பதால்தான் சாதாரண மனிதர்களையும்விட அவன் வேறுபட்டு, மற்றவர்களிலும் பார்க்கத் தனித்துவம் உள்ளவனாக இருக்கின்றான்

ஹிப்பித் தலைக்கு முழுக்கு!

பொலீஸ்காரர் எல்லா ஹிப்பித் தலையரையும் பிடித்து மொட்டை அடிக்கினமாமே"

தீபாவளிக்கு எண்ணை வைச்சு முழுகட்டும் என்ற பற்றிலை செய்கிறார்கள் போல.

- அதிமதுரம்

தள்ளு வண்டி

ஆமி ஒரு எட்டு வயதுச் சிறுமி. தினமும் படிப்பு முடிந்ததும் குளிர்பானக்கடை ஒன்று நடத்துகின்றாள். இவரின் குளிர்பானக்கடை - மரத்தாலான தள்ளுவண்டி. நல்ல வியாபாரமாம்... யார் இந்தச் சிறுமி தெரியுமா?

அமெரிக்க ஜனாதிபதி கார்டரின் மகளேதான் அச்சிறுமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ரவீந்திரன் தனக்குள் ஒரு கருத்தை வைத்திருந்தான். இப்போது மற்றவர்களுக்கும் அழகாகச் சொல்லமுடியும்; வாழ்க்கையின் அர்த்தங்களைக்கூட அவர்களிடமிருந்துதான் பூரணமாகத் தெரிந்துகொள்ள முடியும் என்று அவனுடைய சிந்தனை ஓடியது.

சற்றுநேரமாகக் கடலையே பார்த்துக் கொண்டிருந்த புண்ணியமூர்த்தி, "நானும், உம்முடைய அம்மாவும் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்துத் திரும்பவும் வாழ்கிறதில்லை எனக்கு என்றுமே அலுப்புத் தட்டியதில்லை. இனியும் அலுப்புத்தட்டாது." என்று கூறிவிட்டு, ரவியின் தாயான சிவக்கொழுந்துவைச் சந்தித்ததிலிருந்து அவள் இறக்கும்வரை நடந்த சம்பவங்களைத் தன்போக்கில் சொல்லிக் கொண்டே போனார். அவர் அதைச் சொல்லியபோது, அவரது முகமும், குரலும் பலவித உணர்ச்சி பாவங்களைக் காட்டின. சிவக்கொழுந்துவின் அழகு, கனிவு, அடக்கம், கலைப்பாங்கு, தன்னிடம் காட்டிய தூய்மையான அன்பு இவற்றையெல்லாம் வர்ணிக்கும்போது, அவரது மகிழ்ச்சியால் மலர்ந்தது. குரலில் இன்பத்தின் உணர்ச்சி தெறித்தது. அவனுடன் தொடர்பு கொண்டதையும், திருமணம் செய்ததையும், குடும்பத்தாரும் சுற்றத்தாரும், ஊராரும் எதிர்த்ததை, இழிவாகப் பேசியதை, மானபங்கப்படுத்தியதைக் கூறும்போது அவரது முகம் கொதித்துச் சிவந்தது. குரலில் ஆவேசம் தொனித்தது." உனது அம்மா எனது மகிழ்ச்சிக்காகத் தன்னை முழுமையாக எனக்கு அர்ப்பணித்தாள். அவள் என்னிடம் வாழ்ந்த வாழ்க்கை பரிசுத்தமானது. எங்கள் இருவரின் ஆன்மாக்களும் இரண்டறக் கலந்த வாழ்க்கையை எனது குடும்பத்தவரும் சமூகத்தவரும் புரிந்துகொள்ளாமல் பரிகாசம் பண்ணினுர்கள்; களங்கத்தைக் கற்பித்தார்கள்." என்று

திரைசிங்கம் & திரைசாமி

"பள்ளித் தலமனைத்தும் வோவில் கோவில் செய்குவோம்" என்று பாரதியார் பாடியது தப்பு

அப்போ எப்படிப் பாடியிருக்க வேண்டும்?

"பள்ளித் தலமனைத்தும் தியேட்டர் செய்குவோம்" என்று பாடியிருக்க வேண்டும்.

சொன்னபோது அவர் உணர்ச்சி வசப்பட்டுப்போனுர். ரவியின் அம்மா தன்னைவிட்டுப் பிரிந்து சென்றதைச் சொன்னபோது, அவர் உணர்ச்சி வசப்பட்டுப் போனுர். ரவியின் அம்மா தன்னை விட்டுப் பிரிந்து சென்றதைச் சொன்னபோது அவருடைய முகம் துயரத்தால் வாடி வதங்கியது. கண்கள் பனித்தன. குரல் தழுதழுத்தது.

புண்ணியமூர்த்தி இவற்றையெல்லாம் கூறிவிட்டு, "நீர் கூட எங்கள் இருவரையும் தவருகவும், கேவலமாகவும் நினைத்திருக்கலாம். ஆனுல் நீர் உமது அம்மாவையும் என்னையும் நாங்கள் வாழ்ந்த வாழ்க்கையையும், மற்றவர்கள் அதைப் பார்த்த விதத்தையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்றுதான் இவ்வளவையும் விகல்ப்பமில்லாமல் ஓரளவு விரிவாய்ச் சொன்னேன். நீர் எழுத்தாளனுக இருப்பதால் எங்கள் இருவரையும் புரிந்து கொள்வீர். இதைக்கூட நீர் ஒரு நாவலாய் எழுதமுடியும். நீர் எழுதுவீரோ, இல்லையோ எனக்குத் தெரியாது." என்ற முத்தாய்ப்புடன் தனது தோளில் கிடந்த சால்வையால் தனது முகத்தைத் துடைத்தார்.

கல்லாய்ச் சமைந்து தந்தை கூறுவதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ரவிக்கு மேனியெல்லாம் புல்லரித்தது. தாசியின் வயிற்றில் தான் பிறந்ததை எண்ணி — தந்தையின் மோகப் பசியின் சின்னமாகத் தான் இருப்பதை எண்ணி — தனக்குள்ளே அவமானப்பட்டு மனம் குன்றியிருக்கிறுன். குமுறிக்குமுறி அழுதிருக்கிறுன். இதுதான் தந்தை தனக்குச் செய்த பெரும் கொடுமை என்று நினைத்து அவர் மீது கடும் வெறுப்பும், கோபமும் கொண்டிருக்கிறுன். தனது இதயக் குமுறலை அவரிடம் காட்ட வேண்டும் என்று எண்ணியுமிருந்தான். ஆனுல் இப்போது அந்தக் குமுறல், கோபம், தாழ்வு மனப்பான்மை எல்லாமே போய்விட்டன. தனது தாயும், தந்தையும் மிகவும் உன்னதமானவர்கள். அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை புனிதமானது. இலக்கிய நோக்கில் பார்த்தால் அது ஒரு காவியம். சுருதி பேதமோ, அபஸ்வரமோ சிறிதும் இல்லாத அவர்களது இல்லற வாழ்க்கை இனிமையான ஒரு சங்கீதம். இந்தக் காவியத்திலிருந்தும், சங்கீதத்திலிரு[illegible]ம்தான் தோன்றியதாக இ[illegible]து நினைத்தான். அவன[illegible]னம் புளகித்தது. தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்க்கு அவர் அளித்த மகிழ்ச்சியையும், பரிசுத்தமான வாழ்வையும், அதற்காக அவர் தனது குடும்பத்தையும், சுற்றத்தாரையும் துறந்த அவருடைய மன உறுதியையும் எண்ணி — அப்படியான ஒருவருக்கு, உன்னதமான வருக்குத் தான் மகனுகப் பிறந்ததை எண்ணிப் பெருமித உணர்ச்சி பிரவகித்தது. கண்ணம்மாவின் தந்தையைப்போல் தனது தந்தையும் உயர்ந்தவர் என்றும், அவர் தனது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர் என்றும் கருதினுன்.

அதேபோல் தாயையும் எண்ணினுன். அவளை அவன் வெறுக்கவில்லை. அவளைத் தாசிக்குலத்தவளாக்கிய அமைப்பின்மீதே தீராத வெறுப்பும், கோபமும் ஏற்பட்டது. அவள் மற்றவர்களின் கருவியாக இருந்து அருவருப்பான வாழ்க்கையை வாழாமல் ஒருவருக்கு- அதுவும் உயரிய மனமுள்ள தன் தந்தைக்கு மனைவியாக வாழ்ந்ததை எண்ணி அவளைக் கௌரமாக நினைத்தான். சிலாகிக்கக்கூடிய குணங்களை, சிறப்பியல்புகளைக் கொண்ட தன் தாயை, இப்போது நேரில் பார்த்து மகிழ அவள் உயிரோடு இல்லையே என்று வருந்தவும் செய்தான்.

இவ்வாறு தாயையும், தந்தையையும் எண்ணி, உணர்ச்சிக் கலப்புக்குள் உறைந்தபடி, மனஇலக் கையால் அலைந்து கொண்டிருந்தான், ரவி.

(தொடரும்)

● குறுமணிகள்

- நியூயோர்க் டைம்ஸ் அமெரிக்காவுக்குக் கடவுள் கொடுத்த பரிசு என்று கூறப்படுவதுண்டு. இதற்குக் காரணம் அது கட்சி சார்பற்ற பத்திரிகை.

- இந்தியாவில் அதிகமாக விற்பனையாகும் சினிமாப் பத்திரிகை "பிலிம் ஃபேர்". இதன் முதல் இதழ் 20,000 விற்பனையாயிற்று. இரண்டாவது இதழ் 25,000 விற்பனையாயிற்று. இன்று அதன் விற்பனை 1,60,000.

- ஒரு நிமிடத்திற்கு 140 பேராக உலகில் மக்கள் தொகை கூடிக்கொண்டிருக்கின்றது.

- அறிஞர் அண்ணு மேடையில் அமர்திருக்கும் போது மௌனமாக இருப்பார். அருகிலிருப்போர் பேசுவதையும் காதில் போட்டுக்கொள்ளமாட்டார் தான் பேசப்போவதைச் சிந்தித்த வண்ணம் இருப்பார். ஆகையால்தான் அவர் பேச்சு ஆறுகப் பெருக்கெடுத்தது.

- அமெரிக்கர்களுக்கு வெள்ளிக்கிழமை வேண்டாத நாள். வேண்டாத எண் 13. ஆனுல் வெள்ளை மாளிகை கட்ட ஆரம்பிக்கப்பட்டது ஒரு வெள்ளிக்கிழமை. அன்று திகதி 13.

- கோர் விடால் என்னும் பிரபல நாவல் ஆசிரியர் தன் எடை கூடிவிட்டால், குறைப்பதற்காக உணவு தரமில்லாத ஹோட்டலில் அறை வாடகைக்கு எடுத்துத் தங்கிக்கொள்வார்.

- யப்பானியர் தம் இலக்கியத்தில் பொருட் செறிவைத்தான் மேலாகக் கருதுகின்றனர். கவிதைகளில் கூட அதுவே அடிப்படை. எதுகை, மோனை, தளை எதையும் யப்பானியர் முக்கியமாகக் கருதுவதில்லை

- "இல்லஸ்டிரேட்டட்" வீக்லி பத்திரிகை ஆசிரியர் ஆங்கில மொழியின் சிறப்பைப் பற்றிப் பேசும் போது, "குடிபோதையில் ஒருவன் இருப்பதை மட்டும் வர்ணிப்பதற்கு ஆங்கிலத்தில் 77 வெவ்வேறு சொற்கள் இருக்கின்றன" எனக் கூறியுள்ளார்.

- 6 கோடி மக்களைக்கொண்ட பிரிட்டன், 51 கோடி மக்களைக் கொண்ட இந்தியாவை ஆட்சி புரிந்திருக்கின்றது.

- உலகப் பிரயாண வரலாறுகளுள் எல்லாவற்றுள்ளும் மிகவும் சுவாரஸ்யமானது கொலம்பஸ் எழுதியுள்ள நாட்குறிப்பே.

- அருகிலிருக்கும் மரங்களின் வேரிலிருந்து உணவை உறிஞ்சி வாழ்வது சந்தன மரத்தின் தனிப்பட்ட குணம். அருகில் மரங்கள், செடிகள் இல்லாவிடில் சந்தன மரம் வளருவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் எண்ணங்களில் தோன்றும்
உன்ன வண்ண ஆடைகளை
திண்ணமாகப் பெறக்கூடிய
ஒரே புடவை மாளிகையான

தியாகராஜா அன் பிறதர்ஸ்
ஸ்தாபனத்துக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்.

தியாகராஜா அன்
பிறதர்ஸ்

பிரதான வீதி, நெல்லியடி.
கரவெட்டி.

நகைத்திரு

ஒருவர்: சூதாடிக்கொண்டு திரியிற உங்க மகனுக்கு என்ன பெயர்?

மற்றவர்: தருமராசா

■ ■

ஒருவர்: ஆறு நாள் காட்டில் ஒளிந்திருந்தேன்.

மற்றவர்: உங்கள் பெயர் என்ன?

ஒருவர்: இராமன்

■ ■

ஒருவர்: உங்கள் கதையில் வரும் வில்லி யார்?

கதாசிரியர்: என் மனைவிதான்.

■ ■

பொன்னம்மா மகனுக்கு நாளைக்கு எழுத்து.

சின்னம்மா; அதற்கு...

பொன்னம்மா: அதுதான்... எழுத்துச் சொல்லிக் கொடுக்கிறேன்.

■ ■

ஒருவர்: என் மகனுக்குப் படிப்பதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் இருக்கு. ஆனால் ஒன்று மட்டும் இல்லை.

மற்றவர்; என்ன?

ஒருவர்: மூளை.

■ ■

நீதிபதி: நீ குற்றவாளியா? சுற்றவாளியா?

கூட்டிலிருப்பவர்: அந்த முடிவைக் கேட்கத்தான் இங்கு வந்திருக்கிறேன்.

■ ■

ஒருவர்: சண்டை தொடங்கியிருக்கு

மற்றவர்: ஓடி ஒழிப்பம்.

ஒருவர்: இல்லை; பக்கத்துவீட்டில் வேலிச்சண்டை.

— கேசரி

✻ சிரிப்பே சர்வ தேசிய கீதம் ✻

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதர் வெளியீடு

பெருமையுடன் அளிக்கும்

நீலவண்ணன்
எழுதிய

24 மணி நேரம்

1977 ஆகஸ்ட் —
இனக்கலவரத்தின் முதல் நாள் —
24 மணி நேரம் —
யாழ்நகரில் என்ன நடந்தது?
அதைத் தொடர்ந்து இலங்கையின்
பல பாகங்களிலும்
நடைபெற்ற அக்கிரமங்கள்....

தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்கின்றார்.
''நீலவண்ணன்''

196 பக்கங்கள் —
8 பக்கங்கள் *(ஆட்பேப்பரில் போட்டோக்கள்)*

விலை ரூபா: 6-00
(தபாற் செலவு சதம்: 60)

முதலாம் பதிப்பு முடிவடைந்துவிட்டது.
இரண்டாம் மதிப்பு —
நவம்பர் 20-ம் திகதி வெளியாகும்

ஆனந்தா புத்தகசாலை
326, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

உங்களை அழைக்கிறோம்.

உங்கள் தேவைகள் எதுவானுலென்ன?

இன்றே விஜயம் செய்யுங்கள்.

யாழ்நகரில் சகல விதமான

சாய்ப்புச் சாமான்களும்

மலிவாகவும், உத்தரவாதத்துடனும்
கிடைக்கும் ஒரே இடம்.

ருஜூ ஸ்ரோர்ஸ்

67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 372 தந்தி: ''ருஜூ''

பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம், B/Q 59/300



கண்ணே.... உனக்கு என்ன தீபாவளிப் பரிசு வாங்கி வந்திருக்கிறேன் தெரியுமா?

தெரியுமே.... நீங்கள் உளநூல் ஆராய்ச்சியாளராச்சே.... பெண்களின் உள்ளம் விரும்பும் முயல் மார்க் நூல்தான் பரிசாக வாங்கிவந்திருக்கிறீர்கள்.

சித்திரப் பாவையர் தங்கள் சித்திரத் தையல் வேலைகட்குப் பாவிப்பது முயல் மார்க் நூல்களே!

எங்கும் பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பாளர்கள்:

சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பனி.,

கொழும்பு - 12.

122, நாவலர் வீதி, சி. சிவஞானசுந்தரம் அவர்களால் 122, யாழ்ப்பாணத்திலுள்ள கவின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org